1754

# வடக்கு, கிழக்கு இனப்பிரச்சினை தீர்வுக்காக முஸ்லிம்களால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளும் உடன்பாடுகளும்



எம். ஐ. எம். முஹியத்தீன்

# வடக்கு, கிழக்கு இனப்பிரச்சினை தீர்வுக்காக முஸ்லிம்களால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளும் உடன்பாடுகளும்

**எம்.ஐ.எம். முஹியத்தீன்**

வடக்கு, கிழக்கு இனப்பிரச்சினை
தீர்வுக்காக முஸ்லிம்களால்
முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளும்
உடன்பாடுகளும்

பதிப்பு : 25 ஜனவரி 1999

தொகுப்பு : எம்.ஐ.எம்.முஹியத்தீன்

வெளியீடு : எம்.ஐ.எம்.பதிப்பகம்
57, நொறிஸ் கனல் றோட்டு
கொழும்பு - 10
ஸ்ரீலங்கா.

1754

## 1. கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி
## 1986 ஆகஸ்ட் 09

அதிமேதகு ஜே.ஆர்.ஜயவர்தன
ஜனாதிபதி
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
கொழும்பு.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களே,

**இலங்கையில் ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபை**

இலங்கையில் இனத்துவ மனக்குறைகளைத் தீர்ப்பதற்கான 1986 ஜுன் 25ஆந் திகதியிடப்பட்ட அரசாங்கப் பிரேரணைகளில் சிங்களவரையும், தமிழரையும் போன்று முஸ்லிம்களும் மாகாண சபையில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான சமமான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

தற்போதுள்ள நிலையின்படி சிங்களவர்கள் ஏழு (7) மாகாணங்களில் பெரும்பான்மையினராகவும், தமிழர்கள் இரண்டு (2) மாகாணங்களில் பெரும்பான்மையினராகவும் விளங்குகின்றனர். இனத்துவ விகிதாசாரப்படி சிங்களவர் 74% ஏழு சபைகளும், தமிழர், 18% இரண்டு சபைகளும். முஸ்லிம்கள் 8% ஒரு சபையையும் பெற்றுக்கொள்வதே நியாயமான ஏற்பாடாகும். இலங்கையிலுள்ள பிரதான இனத்துவ சமூகங்களில் ஒன்று என்ற வகையில், மற்றைய இரு ஜன சமூகங்களைப் போலவே எமது சொந்த முதலமைச்சரையும், அமைச்சர்கள் சபையையும் நாம் தெரிவு செய்யக்கூடியதாக, எமக்கு ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபை இருப்பது எமது சட்டநிலைத்தகவுள்ள உரிமையாகும்.

மனக்குறைகள் ஒரு ஜனசமூகத்தினருக்கோ அல்லது ஒரு மதக்குழுவினருக்கு மாத்திரமோ உரியவையல்ல. இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் மற்றும் முஸ்லிம்களுக்கும் மனக்குறைகள் உள்ளன. இலங்கையில் மிகவும் மோசமான

முறையில் பாரபட்சங்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள் என்பதை நிருபிப்பதற்கு நிகழ்வுண்மைகள், புள்ளிவிபரங்கள் அடங்கிய ஆவணமொன்றை இத்தோடு இணைத்துள்ளோம். எனவே அதிகாரப் பகிர்வு வகையும் அலகும் நிலைமைக்குப் பொருத்தமாக இருப்பதோடு சகலரின் அபிலாஷைகளையும் நிறைவேற்றக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

தேசத்தின் தற்போதைய நிலைமையையும் முஸ்லிம்களின் ஒட்டுமொத்தமான நிலைமையையும் நன்கு ஆராய்ந்து கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி, இலங்கையில் சிங்களவர்கள் மற்றும் தமிழர்களைப் போலவே முஸ்லிம்களும் தீர்மான மெடுப்பதிலும் அதிகாரப் பகிர்விலும் பங்குகொள்ளக் கூடியதாக ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபை உருவாக்குவதற்கான பிரேரணையை அதிமேதகு ஜனாதிபதியாகிய தங்களின் கருணைமிக்க கவனத்துக்குச் சமர்ப்பிக்க விரும்புகின்றோம்.

மேலும், விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையின் கீழ், எதிர்காலப் பாராளுமன்றங்களில் எந்த ஒரு தனி அரசியல் கட்சிக்கும் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை கிடைப்பது அரிது என்பதையும் கூற விரும்புகின்றோம். ஆகவே அரசாங்கத்தின் பிரேரணைகளை அமுல்படுத்துவதற்கு அரசியலமைப்புக்குத் தேவையான திருத்தங்களைச் செய்கையில் எமது பிரேரணையைச் சாதகமான முறையில் பரிசீலிக்குமாறு தங்களை வேண்டிக்கொள்ள விரும்புகின்றோம்.

நன்றி

தாழ்மையுள்ள,
கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி

(ஒப்பம்)
எம்.ஐ.எம். மொஹியத்தீன்
தவிசாளர்.

1754

## 2. கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி

### ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபை எமது சட்டநிலைத் தகவுள்ள உரிமையாகும்.

### 1. முஸ்லிம் ஜனசமூகம்

1.1 முஸ்லிம்களாகிய நாம் எமது தாய்நாடாகிய இலங்கையின் பிரஜைகள் என்பதில் பெருமையடைகின்றோம். அரேபியர்களாகிய எமது முன்னோர் சுமார் இரண்டாயிரத்து ஐநூறு (2500) ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைச் சோனகர் என்னும் இனத்தினரை இங்கு தொடக்கிவைத்தனர். இஸ்லாத்தை தழுவிய மக்களென்ற வகையில் நாம் இந்த நாட்டில் 1400 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வாழ்ந்து வருவதாக அங்கீகரிக்கப்பட்ட வரலாற்று நிகழ்வுண்மைகள் கூறுகின்றன.

1.2 முஸ்லிம் ஜனசமூகத்தில் பல்வேறு கலாசாரக் குழுக்கள் அடங்கியுள்ளன. அவர்களுக்குள் பாரிய பெரும்பான்மையினர், ஆரம்பத்தில் வர்த்தகர்களாக இங்கு வந்து குடியேறிய அரேபியர்களின் பிற்சந்ததியினராகிய இலங்கைச் சோனகர் ஆவர். ஒல்லாந்தர் காலத்தில் 1640ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தோனேசியா, மலாயா தேசங்களிலிருந்து வந்த மலாயர்கள் இரண்டாவது குழுவினர் ஆவர். பின்னர் 1796 க்குப் பின்னர் பிரித்தானியர் காலத்தில் இந்திய உபகண்டத்திலிருந்து, பெரும்பாலும் மலபார், கொரமன்டால் கரையோரங்களிலிருந்து மேலதிக முஸ்லிம் வர்த்தகர்கள் இங்கு வந்தனர். மேலும், சமீபத்தில் இந்தியாவிலிருந்து இங்கு வந்த போராக்கள், மேமன்கள் என்போர் இலங்கையைத் தாயகமாகக் கொண்டு இலங்கை முஸ்லிம் ஜனசமூகத்தின் ஒரு பகுதியாகவுள்ளனர்.

1.3 1981 குடிசன மதிப்பு விபரங்களின்படி இலங்கையில் 10,935,666 சிங்களவர்களும், 1,871,535 இலங்கைத் தமிழர்களும், 1,056,972 இலங்கைச் சோனகரும், 825,235 இந்தியத் தமிழரும், 43,378 மலாயர்களும், 38,236 பறங்கியரும், 28,981 ஏனையோருமாக மொத்த ஜனத்தொகை 14,850,001. முழு முஸ்லிம் ஜனத்தொகையாகிய 1,134,556 பேரில் சுமார் 762,551 பேர் சிங்கள மொழி பேசும் பிரதேசங்களிலும், எஞ்சிய 372,005 பேர் வட-கிழக்கு மாகாணங்களிலும் - தமிழ்பேசும் பிரதேசங்களிலும், வசிக்கின்றனர். ஜனசமூகத்தின் அரைவாசிப் பேருக்கு மேற்பட்டோர் வர்த்தகர்கள். எஞ்சியோர் விவசாயிகள்.

1.4 முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் சிங்களப் பிரதேசங்களில் வசித்த போதிலும், அனேகமான முஸ்லிம் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவது கிழக்கு மாகாணத்திலிருந்தேயாகும். 1931 மே - ஜுனில் இடம்பெற்ற விரிவுபடுத்தப்பட்ட வாக்குரிமைத் தேர்தலில் கூட முதலாவது அரச சபைக்குத் தெரிவாகிய ஒரேயொரு முஸ்லிம் அங்கத்தவர் கூட மட்டக்களப்பு தெற்கிலிருந்து தெரிவு செய்யப்பட்டார். முஸ்லிம் செறிவின் காரணமாகவும் சிங்கள மொழி பேசும் பிரதேசத்தைச் சேர்ந்த பல முஸ்லிம்கள் கூட கிழக்குக்கு வந்து முஸ்லிம் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நோக்கில் தேர்தல்களில் போட்டியிட முடிந்தது.

## 2. அரசியல் உரிமைகள்

2.1 சட்ட மன்றத்தில் அக்காலத்தில் சகல தமிழ்பேசும் மக்களினதும் தலைவரென்று எண்ணப்பட்ட திரு.இராமநாதன் முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவம் செய்தார். முஸ்லிம்கள் தமக்கொரு தனியான பிரதிநிதி அவசியமென்று எதிர்ப்பு இயக்கம் நடத்தினார்கள். இதனால் முஸ்லிம்களின் நலனைக் கவனிப்பதற்கென்று திரு. எம்.சீ.அப்துல் ரஹ்மான் நியமிக்கப்பட்டார்.

2.2 1924ல் அகில இலங்கை முஸ்லிம் லீக், சட்டமன்றத்தில் அதிகரித்த பிரதிநிதித்துவத்துக்கும், இலங்கைக்குப் பூரணப் பொறுப்புள்ள அரசாங்கத்துக்கும் இலங்கை முஸ்லிம்களின் கலாசார சமூக, பொருளாதார நலன்களின் பாதுகாப்புக்குமென்று குரல் எழுப்பியது. மானிங் சீர்திருத்தங்கள் சட்டமன்றத்திலிருந்து உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தது. இந்த அரசியலமைப்பில், 1924 ஒக்டோபர் 15ம் திகதி ஆரம்பமாகிய சட்டமன்றத்தில் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவென முஸ்லிம்களுக்கு மூன்று (3) இன வாரித் தெரிவு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன.

2.3 டொனமூர் ஆணைக்குழு இனவாரிப் பிரதிநிதித்துவத்தை இல்லாதொழித்தது. 1931 மே - ஜூனில் இடம்பெற்ற விரிவுபடுத்தப்பட்ட வாக்குரிமைத் தேர்தலில் முதலாவது அரச சபைக்கு ஒரு முஸ்லிம் அங்கத்தவர் மாத்திரமே தெரிவானார். டொனமூர் ஆணைக்குழு ஏற்படுத்திய இந்தப் பின்தள்ளப்பட்ட நிலை முஸ்லிம் சமூகத்துக்கு திருப்தியளிக்கவில்லை. நாடு முழுவதும் சிதறிக் கிடந்த முஸ்லிம் ஜனசமூகத்துக்குப் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கும் முறைமை யொன்றைக் கோரி 1932ல் ரீ.பி ஜாயா தலைமையில் ஒரு தூதுக்கோஷ்டி லண்டன் வெள்ளை மாளிகைக்குச் சென்றது. ஆனால் பிரித்தானிய அரசாங்கம் முஸ்லிம் மக்களுக்குச் சாதகமான எந்தத் தேர்தல் முறைச் சீர்செய்தங்களையும் அறிமுகம் செய்யவில்லை.

2.4 முஸ்லிம்களிடையே இருந்த சகல அரசியல் பிரிவுகளையும் ஒன்றிணைத்த அகில இலங்கை முஸ்லிம் அரசியல் மாநாடு 1945 பெப்ருவரி 05ம் திகதி சோல்பரி ஆணைக்குழுவின் முன்பாகச் சென்று முஸ்லிம்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு மீண்டும் இனவாரிப் பிரதிநிதித்துவம் கொண்டு வரப்படல் வேண்டுமென்று பலமாக வாதிட்டது. புதிய அரசியலமைப்பின் கீழ் சிறுபான்மையினங்களின் நிலைமை குறித்துக் கவலை வெளியிட்டு சோல்பரி ஆணைக்குழுவினர் தேர்தல் தொகுதிகள்

மற்றும் சிறுபான்மையினர் பிரதேசங்களுக்கு குறைக்கப்பட்ட வாக்காளர் தொகையோடு தேர்தல் தொகுதிகள் போன்ற வழிவகைகள் உபயோகிக்கப்பட்டுச் சிறுபான்மை ஜனசமூகங்களுக்கு, விஷேடமாக நாடெங்கும் சிதறுண்டு வாழும் முஸ்லிம்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்படுமென்று நம்பிக்கை தெரிவித்தது.

## 3. இனத்துவ மனக்குறைகள்

3.1 பொறுப்புள்ள அரசியல்வாதிகள் கூட, முஸ்லிம்கள் ஒரு பணக்காரச் சமூகமென்றும், இந்த நாட்டில் அவர்களின் இனத்துவ விகிதாசாரத்துக்கு உரியதைவிடக் கூடுதலான தேசிய மூலவளங்களை அனுபவிக்கின்றனரென்றும் காலத்துக்குக் காலம் அறிக்கைகள் விடுத்துள்ளனர். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இலங்கை முஸ்லிம்களும் இனத்துவ மனக்குறைகளும் என்னும் ஆவணம் இவ்வறிக்கைகளின் பொய்மையை நிகழ்வுண்மைகளோடும் புள்ளிவிபரங்களோடும் மறுத்துரைக்கின்றது. உண்மை என்னவெனில், இலங்கையில் மனக்குறைகளுள்ள ஒரு சமூகம் இருக்குமெனில், இலங்கை முஸ்லிம்களின் நிலையே மிகவும் மோசமான ஒன்றாகும்.

3.2 எமது அரசியலமைப்பு, மத்தியில் அதிகாரங்கள் குவிந்திருக்கும் ஒற்றையாட்சி ஒன்றுக்கே வகை செய்கின்றது. தொகைகளின் காரணமாக அரசியல் அதிகாரங்கள் எப்பொழுதும் பெரும்பான்மை இனத்துவக் குழுவான சிங்களவர்களின் கைகளிலேயே இருந்து வந்துள்ளன. இது சுதந்திரம் பெற்ற காலந்தொட்டு அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ், முஸ்லிம் சிறுபான்மையோருக்கெதிராகப் பாரதூரமான பாரபட்சங்களை இழைக்கும் நிலைக்கு இட்டுச்சென்றது.

* இலங்கையில் சிங்களத்தை மாத்திரம் அரசகரும மொழியாக்கி, தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் தாய்மொழியாகிய தமிழைக் கீழ்நிலைக்குத் தள்ளியமை.

* இலங்கையில் தமிழர்களையும், முஸ்லிம்களையும் சந்தேகத்திற்குரிய குடிமக்களாக்கிய பிரஜாவுரிமைச் சட்டங்களை நிறைவேற்றியமை.

* சிறுபான்மையினர் நலன்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் சட்டவாக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பெரும்பான் மையினர் விருப்புக்கொள்ளும்போது சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பளிக்கவெனச் சோல்பரி அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 29ம் பிரிவை நீக்கியமை.

* காணிக் குடியேற்றக் கொள்கைகளின் கீழ், தகிடுதத்தங்கள் செய்ததால் சிறுபான்மையினருக்கு அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளில் கிடைக்கவேண்டிய சட்டநிலைத்தகவுடைய பங்கு இல்லாமற்போனமையும், காணி ஒதுக்கீடு செய்யப்பட்ட மாவட்டங்களில் உண்மையில் காணியற்றோருக்குக் காணிகள் கிடைக்காமற்போனமைக்கும், அரச காணிகள் ஒதுக்கீடு சிறுபான்மை யினருக்குச் சமமான வசதிகளையும், நியாயமான வாய்ப்புகளையும் வழங்க மறுத்தமை.

* சிறுபான்மையினரின் உயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் பாதுகாப்பின்மை.

3.3 அரசாங்கமும் பெரும்பான்மை ஜனசமூகமும் சிறுபான்மை இனங்களின் நியாயமான மனக்குறைகள், அவற்றின் காரணமாக சுதந்திரம் கிடைத்த நாள்முதல் ஏற்பட்டுள்ள பாதகமான விளைவுகள் பற்றிய விடயங்களில் கண்களையும், காதுகளையும் தொடர்ந்தும் மூடிக்கொண்டிருக்கக்கூடாது. சிறுபான்மையினரின் தேவைகளையும் அபிலாசைகளையும் அங்கீகரித்து அவற்றை பூர்த்திசெய்யத் தவறியமைதான் அதிருப்திக்கும் தனிநாட்டுக் கோரிக்கைக்குமான காரணங்களாகும்.

3.4 முஸ்லிம்கள் பிரிவினையைக் கோரவில்லை. எமது மனக்குறைகளைத் தீர்ப்பதற்கு நாம் பயங்கரவாத வழிகளை நாடவில்லை. எமது உரிமைகளுக்காகப் போராடுவதற்கு எமக்கு முஸ்லிம் அரசியற் கட்சிகள் இல்லை. நாம் பிரதான நீரோட்டத்தோடு தங்கும் விருப்பத் தெரிவை செய்து எமது நம்பிக்கையை தேசிய அரசியற் கட்சிகள் மீது வைத்துள்ளோம். ஆயினும் தேசிய அரசியற் கட்சிகள் எமது காலை வாரிட்டுள்ளன. 1948ல் சுதந்திரமடைந்த காலம்தொட்டுச் சகல அரசாங்கமும் முஸ்லிம் சமுதாயத்தைக் கிள்ளுக்கீரையாகவே மதித்து வந்துள்ளன.

## 4. அதிகாரப் பகிர்வு

4.1 இப்பொழுது இலங்கையிலிருப்பது இனத்துவ மனக்குறைகளேயன்றித் தமிழ்ப் பிரச்சினையல்ல. மனக்குறைகள் ஒரு ஜனசமூகத்துக்கோ அல்லது ஒரு மதக் குழுவுக்கோ மாத்திரம் சொந்தமானதல்ல. இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் அனைவருக்குமே மனக்குறைகள் உள்ளன. இனத்துவ மனக்குறைகளைத் தீர்ப்பதற்குப் பல்வேறு அரசியல் தீர்வு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம், டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் மற்றும் சீ இணைப்பு என்பனவை நன்கு அறியப்பட்ட, நடைமுறைக்கு முன்வைக்கப்பட்ட முக்கியமான தீர்வுகளாகும். இப்பிரேரணைகளில் அடங்கியிருந்த முக்கியமான அதிகாரப் பகிர்வே இவையனைத்துக்கும் பொதுவான அம்சமாகும். இன்று இலங்கையில் இருக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கடசிகளில் உள்ள சகல பிரமுகர்களும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் இனத்துவ மனக்குறைகளைத் தீர்ப்பதற்கான கோட்பாடு அதிகாரப் பகிர்வு என்பதை ஏற்றுக்கொண்டவர்களாவர்.

4.2 1986 ஜுன் 25ம் திகதியிடப்பட்ட மாகாண சபைகளுக்கு அதிகாரப் பகிர்வுக்கான அரசாங்கப் பிரேரணைகள் மீதான அரசியற் கட்சிகளின் தற்போதைய கலந்துரையாடல்கள் இலங்கையில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான மிகச் சிறந்த சந்தர்ப்பமாகும். எமது நாடு இரத்தம் சிந்திச் சிறிதுசிறிதாக மரணிப்பதை அனுமதிப்பது பெரும் தேசிய அவலமாகும். சமாதானத்தை மீண்டும் நிலைநாட்டி அன்னியோன்னியமாக வாழ்வதற்கான வழிவகைகளைத் தேடுவது எமது அறிவாற்றலுக்கு அப்பாற்பட்ட விடயமல்ல. அப்படிச் செய்வது எம்மனைவரினதும் முற்றுமுழுதான நலன்களுக்கு அனுகூலமான ஒன்றாகும்.

4.3 மத்தியில் அதிகாரங்கள் குவிந்த ஒற்றையாட்சி முறைமைக்கும், தனிநாட்டுக் கோரிக்கைக்குமிடையில் ஒரு விட்டுக் கொடுப்பாகச் சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய இனத்துவக் குழுக்களிடையே அதிகாரங்கள் முறையாகப் பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும். அங்குமிங்கும் ஒட்டுப்போடும் முயற்சிகளும் அரைகுறை நடவடிக்கைகளும் தீர்வை மேலும் கஷ்டமாக்கவே உதவும். உண்மையான அதிகாரப் பகிர்வு இடம்பெறுதல் வேண்டும். மத்திக்கும் சுற்றயல் அலகுகளுக்குமிடையிலான அதிகாரப் பிரிவுகள் அரசியலமைப்பில் இடம்பெறுதல் வேண்டும். இத்தகையவோர் அரசியலமைப்பே நாட்டின் ஐக்கியம், ஒருமைப்பாடு மற்றும் இறைமையைப் பாதுகாக்கும். பகிர்ந்தளிக்கப்படும் அதிகாரங்கள் இனத்துவச் சிறுபான்மையினராகிய தமிழர்களும், முஸ்லிம்களும் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளவும் அவர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் தீர்மானம் எடுக்கும் செயல் முறையில் அவர்கள் பூரணமாகப் பங்கேற்கவும் உதவுவதாக இருத்தல் வேண்டும்.

## 5. அதிகாரப் பகிர்வு அலகு

5.1 1986 ஜுன் 25ம் திகதியப் பிரேரணைகளில் அரசாங்க முறைமைகள் என்பதன் கீழ், மத்திய அரசாங்கத்தைத் தவிர்த்து. அரசாங்க அதிகாரத்தைப் பிரயோகிக்கக்கூடிய பிரதான முகவர் நிறுவனங்களாகப் பின்வருபவை குறிப்பிடப்படுகின்றன.

அ) மாகான சபை
ஆ) மாநகர சபைகளும், நகர சபைகளும்
இ) ஒவ்வோர் உ.அ.அ. பிரிவுகளிலுமுள்ள பிரதேச சபைகள்.

முஸ்லிம்கள் நாடு முழுவதும் சிதறுண்டு வாழ்வதால், மாகாணசபை மட்டத்தில் ஏனைய இரு ஜனசமூகங்களும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது போல், முஸ்லிம் ஜனசமூகம் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு இயைபுள்ள பிரேரணைகள் அறவே போதாதவை என்பதை நாம் அவதானிக்கின்றோம். தற்போதைய நிலையின்படி பெரும்பான்மை ஜனசமூகமாகிய சிங்களவர்கள், சிங்கள மொழி பேசும் ஏழு மாகாணங்களில் அவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் காரணத்தினால் ஏழு மாகாண சபைகளைப் பெற்றுக் கொள்ளுவார்கள். தமிழர்கள் தமிழ் பேசும் இரண்டு மாகாணங்களில் பெரும்பான்மையாக இருப்பதால் அவர்கள் இரண்டு மாகாணங்களைப் பெற்றுக் கொள்ளுவார்கள்.

5.2 கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி இலங்கை அரசாங்கத்தின் கோட்பாடுகளான,

* இலங்கையின் ஐக்கியம்,ஒருமைப்பாடு மற்றும் இறைமையைப் பேணுதல்.

* இலங்கை அரசியலமைப்பின் ஒற்றையாட்சித் தன்மையை பேணுதல்.

என்பனவற்றுக்குப் பூரண ஆதரவு அளிக்கின்றது. அதேவேளையில் அதிகாரப் பகிர்வு முறைமையும் அதிகாரப் பகிர்வு அலகும் நிலைமைக்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும். இலங்கையின் பல்வேறு இனத்துவக் குழுக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடியதாக, ஏனைய மாகாணங்களுக்குச் சமமான அதிகாரங்கள் மற்றும் கருமங்களோடு கூடிய ஒரு தனியான முஸ்லிம் மாகாணசபை உருவாகுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படின், தற்போதைய இனத்துவ முரண்பாட்டைத் தீர்க்கும் நோக்கில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகளுக்கு ஒப்புதல் தெரிவிக்க கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி தயாராகவுள்ளது.

## 6. கிழக்கிலங்கை முஸ்லிம்கள் இணைப்புக்கு எதிரானவர்களல்ல

6.1 தமிழ் மிதவாதிகளும், ஆயுதம் தாங்கிய ஈழப் போராளிகளும் தனிநாட்டுக்கு ஈடான மாற்று ஒன்று கிடைக்காவிடில் தமது இறுதி இலட்சியத்தை அடையும்வரை போராட்டத்தைத் தொடருவோமென்று கூறியுள்ளனர். அவர்கள் நினைப்பது தமிழ் பேசும் வட-கிழக்கு மாகாணங்களில் தமிழ்ப் பகுதிகளில் ஒரு மொழிவாரிச்சபை குறித்து ஆகுமென்று நாம் நம்புகின்றோம். பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது போன்று, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் தாம் பெரும்பான்மையாகவுள்ள பகுதிகளில் ஒரு தனியான சபைகள் பெற்றுக் கொள்ளக்கூடியதாக, இரண்டு (2) அல்லது அதற்கு மேற்பட்ட சபைகள் உருவாக்குவதைத்தாம் வரவேற்போமென தெளிவாகக் கூறியுள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைப்புக்கு முஸ்லிம்கள் எதிரானவர்கள் என்று கூறியே இணைப்பு மறுக்கப்படுகின்றது. முஸ்லிம்கள் தாம் தமிழர்களின் ஆதிக்கத்தின் கீழ் முக்கியத்துவமற்ற ஒரு சிறுபான்மையினராக ஆகிவிடு

வோமென்ற காரணத்தினாலேயே வட-கிழக்கு இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். ஆயினும் தமிழ் பேசும் மாகாணங்களில் உள்ள முஸ்லிம் பிரதேசங்கள் ஒரு தனியான முஸ்லிம் மாகாணசபை அமைக்கும் நோக்குடன் தவிர்த்து, ஏனைய தமிழ்ப் பிரதேசங்கள் ஒன்றாக இணைக்கப்படின் அவர்கள் அதை எதிர்க்கப் போவதில்லை.

## 7. முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபை

7.1 முஸ்லிம்களும் இலங்கையில் ஓர் அங்கீகரிக்கப்பட்ட பிரதான இனத்துவ ஜனசமூகமென்ற வகையில், ஒரு சபையை அமைக்கக்கூடிய அளவு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தில், மற்ற இரு பிரதான இனத்துவக் குழுக்கள் போலவே முஸ்லிம்களும் அதிகாரப் பகிர்வை அனுபவிப்பதற்கு அனுகூலமாக அவர்களுக்கும் தனியான ஒரு மாகாணசபை இருப்பது அவர்களின் சட்டநிலைத்தகவுள்ள உரிமையாகும்.

7.2 முஸ்லிம்களுக்கான உத்தேச மாகாணசபை, கிழக்கு மாகாணத்தில் அமையலாம். இச்சபையின் அதிகாரப் பிரதேசம் அம்பாரை மாவட்டத்தில் முஸ்லிம் பெரும்பான்மைத் தேர்தல் தொகுதிகளான கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் மற்றும் வெவகம்பற்று தெற்கின் ஏனைய பகுதிகளைத் (ஏறக்குறைய 920 சதுர மைல்கள்) தளமாகவும் மற்றும் நிலத்தொடர்பற்ற முஸ்லிம் பிரதேசங்களான காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி, மூதூர், கிண்ணியா, தம்பலகாமம் குச்சவெளி என்பனவற்றையும் உள்ளடக்கியும் அமையும். வடமாகாணத்தோடு கிழக்கு மாகாணத்தின் தமிழ் பிரதேசங்கள் இணையும் பட்சத்தில், மன்னார் மாவட்டத்தின் முசலி மற்றும் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மாகாண சபையோடு இணைக்கப்படுதல் வேண்டும்.

இந்த நிலத்தொடர்பற்ற முஸ்லிம் பிரதேசங்கள் முதலில் புதிய பிரேரணைகளின் (111) 16ஆம் பந்தியில் குறிப்பிட்டது போன்று

இனவாரிப் பிரதேச சபைகளாகவும், உ.அ.அ. பிரிவுகளாகவும் மாற்றப்பட்டு, முஸ்லிம் மாகாண சபையின் பகுதிகளாகக் கருதப்படுதல் வேண்டும். இது தமிழ் பேசும் பிரதேசங்களில் வாழும் மொத்த முஸ்லிம் ஜனத்தொகையான 372,005 பேரில் 85% க்கு அதிகமானவர்களை, அதாவது 315,000 பேரை உள்ளடக்கும். முஸ்லிம்களுக்கான சபையில் ஏறக்குறைய 80,000 தமிழர்களும் 40,000 சிங்களவர்களும் அடங்குவர். உத்தேச முஸ்லிம் சபையில் 72% க்கும் அதிகமானோர் முஸ்லிம்களாக இருப்பர்.

7.3 புவியியல் ரீதியில் நிலத்தொடர்பற்ற பிரதேசங்களின் நிர்வாகப் பிரச்சினை என்று சிலர் கூறுவது போன்று இயலாத ஒன்றல்ல. உதாரணமாக இந்தியாவில் முன்னைய பிரன்சு உரிமைப் பிரதேசமாகிய பாண்டிச்சேரி அதன் பகுதிகள் மூன்று வேறுபட்ட மானிலங்களான கேரளம், தமிழ்நாடு, மற்றும் ஆந்திரப் பிரதேசங்களில் அமைந்திருந்த போதிலும் ஒரு தனியான யூனியன் மானிலமாக நிர்வாகம் செய்யப்படுகின்றது. இலங்கையில் தமிழ் பேசும் பிரதேசங்களில் வாழும் சகல முஸ்லிம்களும் தமிழ் பேசுவோராவர். காணி, மொழி, பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்புக் குறித்து அவர்களின் மனக்குறைகள் ஒத்தவையாகும். நாம் கேட்பது இந்தியாவிலுள்ள புவியியல் ரீதியில் நிலத்தொடர்பற்ற யூனியன் மாநிலப் பங்கான ஒரு மாகாண சபையேயாகும்.

## 8. தனிநாட்டுக்கு ஈடான நிலைத்தகவுள்ள மாற்றீடு

8.1 கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி நாடு பிளவுபடுவதற்கும் பயங்கரவாத வழிமுறைகளுக்கும் எதிரானதாகும். ஆயினும் முரண்பாட்டுக்கு ஓர் அர்த்தமுள்ள அரசியல் தீர்வு ஏற்பட வேண்டுமெனில் தமிழர்களின் அபிலாசைகளைத் தீர்க்கக்கூடிய ஒரு ஈடான நிலைத்தகவுள்ள மாற்றீடு வழங்கப்படல் வேண்டுமென்பதை உணர்கின்றது. நாட்டின் தற்போதுள்ள நிலைமையையும் முழு இனப்பிரச்சினையையும் நன்கு

ஆராய்ந்து ஒற்றையாட்சி முறையினுள் ஜனத்தொகைக்கேற்ப, கிழக்கு மாகாணத்தில் மொத்த நிலப்பரப்பு 3, 839 சதுர மைல்களாகும். சிங்களவர்கள் 25% - 960 சதுர மைல்கள், தமிழர்கள் 42% - 1612 சதுர மைல்கள், முஸ்லிம்கள் 33% - 1267 சதுர மைல்கள் என்றரீதியில் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

8.2 960 சதுர மைல் சிங்கள அலகில் பிந்தென்னப்பற்று வடக்கு, பிந்தென்னப்பற்று தெற்கு, அம்பாரை மாவட்டத்தில் 880 சதுரமைல் பிரதேசம், மீதி 80 சதுரமைல்கள் திருகோணமலை மாவட்டத்தின் சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசமாகிய சேருவில தேர்தல் தொகுதியிலிருந்து சேர்த்துக் கொள்ளப்படலாம். முஸ்லிம் அலகு - கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் என்னும் மூன்று தொகுதிகளும் அம்பாரை மாவட்டத்தில் சுமார் 920 சதுரமைல்கள் பிரதேசம் மற்றும் காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி, மூதூர், கிண்ணியா மற்றும் தம்பலகாமம், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் சுமார் 342 சதுரமைல்கள் - மொத்தமாக 1267 சதுரமைல்கள். எஞ்சிய மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் 1612 சதுரமைல்கள் தமிழ் அலகுக்கு ஒதுக்கப்படலாம்.

8.3 அரசாங்கப் பிரேரணைகளின் 2ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பாராளுமன்ற அதிகாரங்களின் பிரகாரம், 960 சதுர மைல் சிங்கள அலகையும் ஏனைய சிங்களப் பிரதேசங்களான ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களுடன் இணைப்பதன் மூலம் மாகாண எல்லைகள் மாற்றப்படலாம். 1267 சதுரமைல்கள் தமிழ் அலகு தொடர்ந்தும் கிழக்கு மாகாணமாக எஞ்சியிருக்கலாம் தமிழ் அலகை வடமாகாணத்துடன் இணைத்து வட-கிழக்கு மாகாணசபை உருவாக்கப்படலாம். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் அலகு, முஸ்லிம் மாகாணசபையை ஏற்படுத்தலாம். மாகாண சபைகளின் மொத்த எண்ணிக்கை ஒன்பதாகவே இருக்கும்.

## 9. முடிவுரை

சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் இந்நாட்டில் 2500 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் வித்தியாசமான இனத்துவ ஜனசமூகங்களாக இருந்த போதிலும் பரஸ்பர நன்மைகளுக்காக அவர்கள் சமாதானமாக வாழ்வது சாத்தியமும் அவசியமுமாகும். பரஸ்பர உறவு, சுதந்திரம், சமத்துவம் ஆகியன நீதியின் அடிப்படையில் அமைந்தால் சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் ஒற்றையாட்சியினுள் சமாதானமாக வாழமுடியும். ஒரு ஜனசமூகம் வேறொரு ஜனசமூகத்தை அடக்கி ஆதிக்கம் செய்வது முடிவுக்கு வருவதோடு, அணுகு முறை சமத்துவத்தினதும் பரஸ்பர நன்மையினதும் அடிப்படையில் அமைய வேண்டும்.

| | |
|---|---|
| கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி | |
| (ஒப்பம்) | (ஒப்பம்) |
| எம்.ஐ.எம்.மொஹிதீன் | எம்.எச்.சேகு இஸ்ஸதீன |
| தவிசாளர் | பொதுச் செயலாளா |

## 3. பள்ளிவாசல்கள் சபை, அம்பாரை மாவட்டம்

ஜும்ஆ பள்ளிவாசல்
சாய்ந்தமருது கி.மா.
இலங்கை
12 ஆகஸ்ட் 1986.

அதிமேதகு
ஜே.ஆர்.ஜயவர்தன
ஜனாதிபதி
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
ஜனாதிபதி செயலகம்
கொழும்பு.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு,

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு வெற்றிகிட்ட வேண்டுமென்று கிழக்கிலங்கை முஸ்லிம்கள் எடுத்த தீர்மானம்

10.08.86இல் அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்ற கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பரந்தபட்ட பிரதிநிதிகளின் மாநாட்டில் ஏகமானதாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரதியை தங்களுக்குச் சமர்ப்பிக்க விரும்புகின்றேன். தங்கள் அரசாங்கத்துக்கும் தமிழ் மக்களுக்குமிடையே இடம்பெறும் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவுற்று, ஆசிகள் பெற்றதும் எம்பேரபிமானத்துக்கு உரியதுமான எம் தாய் நாட்டில் மீண்டும் சமாதானம் உருவாக வேண்டுமென்பது எமது நம்பிக்கையும் பிரார்த்தனையுமாகும்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்)
தவிசாளர்

### 4. பள்ளிவாசல்கள் சபை, அம்பாறை மாவட்டம்

ஜும்ஆ பள்ளிவாசல்
சாய்ந்தமருது கி.மா
இலங்கை
12 ஆகஸ்ட் 1986.

<u>தீர்மானம்</u>

10.08.86 இல் அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்ற அம்பாறை மற்றும் மட்டக்களப்புப் பள்ளிவாசல்கள் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைகள் சம்மேளனத்தின் தூதுப் பிரதிநிதிகளும் ஏனைய முக்கிய சமூக மற்றும் கலாசார அமைப்புக்களின் தூதுப் பிரதிநிதிகளும் இப்பிரதேசத்தின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் இப்பிரதேசத்தின் ஏனைய முஸ்லிம் அரசியல்வாதிகளும் பிரபலமான தலைவர்களுமாகிய, கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பெரும்பகுதியைப் பிரதிநிதித்துவம் செய்வோரின் மாநாட்டில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்படுகின்றது.

நாட்டில் மாகாண சபைகள் ஏற்படுத்துவதே இனப்பிரச்சினைக்குரிய தீர்வாகுமென்று கிழக்கிலங்கை முஸ்லிம்கள் ஆரம்பத்திலிருந்தே தொடர்ந்து வலியுறுத்திவந்த நிலைப்பாட்டை மீண்டும் வலியுத்தி, வட-கிழக்கு மாகாணங்களின் இணைப்பு, கிழக்கு மாகாண முஸ்லிம்களின் நலன்களுக்குப் பாதகமானதென்பதால் அதற்கு எமது எதிர்ப்பையும் தெரிவிற்கிறது.

தொடரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் இந்திய அரசு, த.வி.கூ. தலைவர்கள் மற்றும் தமிழ் இளைஞர் போராளிக் குழுக்கள் எடுத்த நிலைப்பாட்டையும், சகல ஜனசமூகங்களும் ஒரு தீர்வு எட்டப்படுவதற்கு அவசியமான உடனடி ஒத்துழைப்பை

வழங்க வேண்டுமென்பதையும் கவனத்திற் கொண்டு, அரசாங்கம் வேறுவழியின்றி, வட-கிழக்கு மாகாணங்களில் ஒன்றினது அல்லது இரண்டினதும் எல்லைகளை மாற்றுவதன் மூலம் தற்போதைய கோரிக்கைகளாகிய தமிழ் பேசும் பிரதேசம் ஒன்றை வழங்க முன்வந்தால், வட-கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு - அவர்கள் தனி இனக்குழு என்பதால் - முஸ்லிம் மாகாணம் என்று அழைக்கப்படும் ஒரு தனியான மாகாணம் வழங்கப்பட வேண்டும்.

தற்போதைய பாராளுமன்றத் தேர்தல் தொகுதிகளான கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் என்பனவற்றை உள்ளடக்கும் மாவட்டமும் அதைச் சுற்றியுள்ள புவியியல் ரீதியில் நிலத் தொடர்புடைய பிரதேசமும், தளப்பகுதியாகவும் மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களின் முஸ்லிம் ஜனஅடர்த்திப் பிரதேசங்கள், தனியான உ.அ.அ. பிரிவுகளின் கீழ்க் கொண்டுவரப்பட்டு புவியியல் நிலத்தொடர்புள்ள பிரதேசங்கள் உட்பட, முஸ்லிம் மாகாணத்தை ஆக்கும் பகுதிகளாகக் கணிப்பிடப்பட வேண்டுமென்றும், முஸ்லிம்கள் தற்போது சொந்தமாகக் கொண்டுள்ள விவசாயக் காணிகள், குடியேற்றங்கள் விஸ்தரித்தல், விவசாய கால்நடை அபிவிருத்தி, கைத்தொழில், மீன்பிடி மற்றும் நிகழ்கால, எதிர்காலத் தேவைகளுக்கான மேலதிகக் காணிகள் மற்றும் நீர், மூலவளங்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்றும் இத்தீர்மானம் கோருகின்றது.

(ஒப்பம்)
தவிசாளர்.

## 5. அகில இலங்கை முஸ்லிம் லீக்

26 ஆகஸ்ட் 1986

அதிமேதகு ஜே.ஆர்.ஜயவர்தன

ஜனாதிபதி

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

கொழும்பு

அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு,

முஸ்லிம் மாகாண சபை

1986 ஜூன் 25ம் திகதி அகில இலங்கை முஸ்லிம் லீக் தங்களைச் சந்தித்து, அரசியற் கட்சிகள் மாநாட்டில் தற்போது கலந்துரையாடப்படும் விஷயங்கள் சம்பந்தமான எமது பிரேரணைகளைச் சமர்ப்பித்துள்ளோம்.

கிழக்கு மாகாணத்துக்கு முஸ்லிம் லீக்கினால் ஆலோசனை முன்வைக்கப்பட்ட மூன்று சபைகள் விடயத்தில், ஒரு முஸ்லிம் மாகாண சபை உருவாகுவதற்கு நாம் பின்வரும் திட்டத்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

இச்சபையின் அதிகாரப் பிரதேசம் மூன்று பெரும்பான்மை முஸ்லிம் தேர்தல் தொகுதிகளான கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் மற்றும் வெவகம்பற்று தெற்கின் எஞ்சிய பகுதிகளையும் தற்போதய அம்பாறை மாவட்டத்தில் 920 சதுர மைல்கள் தளப்பிரதேசமாகவும், புவியியல் ரீதியாக நிலத்தொடர்பற்ற முஸ்லிம் பிரதேசங்களாகிய காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி, மூதூர், கிண்ணியா தம்பலகாமம் மற்றும் குச்சவெளியையும் உள்ளடக்கும்.

நிலத்தொடர்பற்ற முஸ்லிம் பிரதேசங்கள் முதலில் அரசியற் கட்சிகளின் மாநாட்டுக்கான பிரேரணை (iii) 16ம் பந்தியில் குறிப்பிட்டது போன்று இனவாரியான பிரதேச சபைகளாக - உ.அ.அ பிரிவுகளாக ஆக்கப்படுதல் வேண்டும். இது கிழக்கு மாகாணத்தின் மொத்த முஸ்லிம் ஜனத்தொகையான 317,000 பேரில் 80% மான 300,000 முஸ்லிம்களை உள்ளடக்கும். முஸ்லிம்களுக்கான சபையில் சுமார் 80,000 தமிழர்களும், 40,000 சிங்களவர்களும் அடங்குவர். உத்தேச முஸ்லிம் சபையில் முஸ்லிம்களின் விகிதாசாரம் 71% க்கும் அதிகமாகவிருக்கும்.

பல நாடுகளில் புவியியல் ரீதியில் நிலத்தொடர்பற்ற பிரதேசங்கள் ஒரு அலகாக வெற்றிகரமாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபை நிலத் தொடர்பற்ற பிரதேசங்களை உள்ளடக்குவது குறித்துப் பாரதூரமான ஆட்சேபனை எதுவும் எழ இடமில்லை.

தங்கள் விசுவாசமுள்ள

அகில இலங்கை முஸ்லிம் லீக்

ஜாபீர் ஏ. காதர்

பிரதித்தவிசாளர்.

## 6. இலங்கை முஸ்லிம் கவுன்சில்

தவிசாளர்: 13, லெயாட்ஸ் வீதி
கலாநிதி பதியுதீன் மஹ்மூத் கொழும்பு - 05
செயலாளர் நாயகம் 09 செப்ரெம்பர் 1987
ஏ.அஸீஸ்
கௌரவ பொருளாளர்
ஏ.டபிள்யூ.எம்.அமீர்
இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
கொழும்பு.

### இந்திய இலங்கை ஒப்பந்தமும்
### வடக்கு - கிழக்கு இலங்கை முஸ்லிம்களும்

1987 ஜுலை 29ம் திகதிய இந்திய - இலங்கை ஒப்பந்தம் பின்வருவனவற்றை எடுத்துரைக்கிறது:

1.2 இலங்கை சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் (சோனகர்) மற்றும் பறங்கியரோடு வேறுபலரையும் உள்ளடக்கும் ஒரு பல இனத்துவ, பல மொழிகள் பேசும் பன்மைத்துவச் சமூகம் என்பதை அங்கீகரித்தது.

1.3 ஒவ்வோர் இனத்துக்கும் தெளிவான கலாசார மொழித் தனித்துவம் உண்டென்றும், இது கவனமாகப் பேணி வளர்க்கப்படல் வேண்டுமென்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

1.4 வடக்கு-கிழக்கு மாகாணங்கள் வரலாற்று ரீதியாகத் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்கள் என்பதையும், இவர்கள் எப்போதும் இப்பிரதேசத்தில் ஒன்றாக, வேறு இனத்துவக் குழுக்களோடு வாழ்ந்து வந்துள்ளனர் என்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

1.5 இலங்கையின் ஐக்கியம், இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு என்பனவற்றுக்குப் பங்களிக்கும் சக்திகளை வலுப்படுத்தும் தேவையையும், ஒரு பல் இனத்துவ, பல மொழிகள் கொண்ட பல்லினச் சமுதாயத்தில் சகல பிரஜைகளும் சமத்துவம், பாதுகாப்பு மற்றும் சமாதானத்தோடு வாழ்ந்து, செழிப்படைந்து, தம் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடியதாக அதன் தன்மையைப் பேணுவதையும் கவனத்திற் கொண்டுள்ளது.

அவ்வாறு கூறப்பட்ட போதிலும் அதிகாரப் பகிர்வு அலகொன்றை உருவாக்குவதில் முஸ்லிம் (சோனகர்) இனத்துவ ஜனசமூகத்தின் நலன்கள் பூரணமாக உதாசீனஞ் செய்யப்பட்டுள்ளதோடு, மேலே விளக்கப்பட்ட கோட்பாடுகளினடிப்படையில் முஸ்லிம்கள் தமது சொந்தப் பாதுகாப்பை ஏற்படுத்தி, உறுதிசெய்வதற்கு உதவும் வகையில் எந்த வாய்ப்பும் வழங்கப்படவில்லை.

இணைந்த (வட-கிழக்கு) பிரதேசங்களில் 70% பெரும்பான்மைத் தமிழ் இனத்துவ ஜனசமூகத்துக்கு அரசியல் அதிகாரம் பகிர்ந்தளிக்கும் போது முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பாதுகாக்கப்போதிய ஏற்பாடுகள் எதுவும் செய்யபடவில்லை.

<u>தமிழ் இனப்பிரச்சினைகளைத் தீர்க்கும் போது, புதிதாக ஒன்றிணைத்து உருவாக்கப்படும் பிராந்தியத்தில் முஸ்லிம்கள் ஓர் அரசியல் பலமற்ற அடிமைச் சனசமூகமாக மாற்றப்படக்கூடாது.</u> தமிழர்கள், இணைந்த பிரதேசத்தின் 70% மாக இருப்பதோடு கல்வி மற்றும் ஸ்தாபன அமைப்புகளில் மிகவும் முன்னேறி உள்ளமையால் புதிதாகப் பெற்ற அரசியல் அதிகாரத்தை தமிழர்களுக்கு ஆகக்கூடிய நன்மைகளைப் பெற்றுக் கொள்ளவே பயன்படுத்துவர். இணைந்த பிராந்தியத்தில் 18% மாகவுள்ள முஸ்லிம்கள், போதுமான அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் இல்லாத நிலையில், வெறும் விறகு பிளப்போராகவும் நீரிறைப்போராகவுமே ஆக்கப்படுவர்.

இணைந்த வடகிழக்கு மாகாணத்தில் சுதந்திரமான முஸ்லிம் இனத்துவ ஜனசமூகத்துக்குத் தனியான அதிகாரப் பகிர்வு அலகு எதுவும் உருவாக்கப்படாமையால், விசேடமாகச் சட்டம், ஒழுங்கு, காணிக் குடியேற்றம் குறித்து விசாலமான அதிகாரங்கள் மாகாண சபைக்குப் பகிர்வு செய்யப்பட விருக்கும்போது முஸ்லிம்கள் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டியுள்ளது.

உத்தேச மாகாண சபைக்கு, முழுக்க முழுக்கத் தமிழர்கள் அல்லாவிடினும், பெரும்பான்மையான தமிழர்களால் ஆக்கப்படும் ஒரு பொலிஸ் படை இருக்கும். பொலிஸ் படையிலிருக்கும் டி,ஐ.ஜி உத்தியோகத்தர்களும், இன்ஸ்பெக்டர்களும் தமிழர்களாகவே இருப்பர். உத்தேச மாகாணப் பொலிஸ் படையின் ஆளணியினர் வெற்றிடங்கள் தமிழ்ப் போராளிகளினாலேயே நிரப்பப்படக்கூடிய பலமான சாத்தியக்கூறு உள்ளதையும் எவரும் மறுக்க முடியாது. இத்தகைய நிலையில் முஸ்லிம்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பிரதேசங்களில் இது தொடர்ச்சியான பீதிக்கும் கவலைக்கும் பதற்றத்துக்குமே இட்டுச் செல்லும். முஸ்லிம்கள் தமிழ்ப் போராளிகளினால், தொடர்ந்தும் பயங்கரவாதப் பயமுறுத்தலுக்கு ஆளாக்கப்படுவதை முஸ்லிம்கள் விரும்பவில்லை.

இணைந்த பிராந்தியத்தில் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின்கீழ் வராத அரச காணிகளில் குடியேற்ற அதிகாரமும் 70% தமிழ்ப் பெரும்பான்மை மாகாண சபையின் கீழ் வருவதால் மேலும் தமிழர்கள் குடியேறாதவாறு, வரலாற்று ரீதியாக தமிழ் பேசும் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்கள் இனங்காணப்பட்டு பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

புதிதாக இயற்றப்பட்ட 1987ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் சட்ட ஏற்பாடுகளின் உள்ளூராட்சி சபைகளை அமைப்பதிலும், அபிவிருத்திக்கென சட்ட நிலைத்தகவுள்ள காணிகள் மற்றும் இயற்கை மூலவளங்களை ஒதுக்கியழிக்கும் விடயத்திலும் முஸ்லிம்களுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

1921க்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களின் தொகை 4%க்கும் குறைவாகவே இருந்தது. சிங்களக் குடியேற்றங்களின் பின்னர், 1981ம் ஆண்டின் குடிசன மதிப்பு விபரங்களின்படி தமிழர்கள் 42%, முஸ்லிம்கள் 33%, சிங்களவர்கள் 25% மாகவிருந்தனர். கிழக்கு மாகாணத்தில் இந்த வருடம் தேர்தலைச் சந்திப்பதற்குள்ள உள்ளூராட்சி சபைகளின் நிரலில் 25%மான சிங்களவர்களுக்கு 12 பிரதேச சபைகளும், ஒரு நகர சபையும் கொடுக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் 33% மான முஸ்லிம்களுக்கு 16 பிரதேச சபைகளும், ஒரு நகர சபையாவது கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆயினும் முஸ்லிம்களுக்குக் கிடைத்தது 12 பிரதேச சபைகள் மட்டுமே. திருகோணமலை மாவட்டத்தில் 34% சிங்களவர்களுக்கு 05 சிங்களப் பெரும்பான்மை பிரதேச சபைகள் வழங்கப்பட்டிருக்கையில் 29% மான முஸ்லிம்களுக்கு ஒரு பெரும்பான்மைப் பிரதேசசபை மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று, காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி, வாழைச்சேனை இனவாரிப் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டபோது, சட்ட நிலைத்தகவுள்ள காணிப் பிரதேசங்களும் இயற்கை மூலவளங்களும் முஸ்லிம் பிரதேச சபைகளுக்கு வேண்டுமென்றே மறுக்கப்பட்டதால், அனேகமான முஸ்லிம் பிரதேச சபைகள் பொருளாதார நிலைத்தகவு அற்றவையாக இருக்கின்றன.

கல்ஓயாத் திட்டக் கரும்புப் பெருந்தோட்டத் திட்டத்தின் கீழ் முஸ்லிம் பெரும்பான்மை அம்பாரை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றம் இடம்பெற்றது. இப்போது அம்பாரை ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டமல்ல. இது முஸ்லிம்களுக்குப் பொருளாதார ரீதியாகவும் அரசியல் பிரதிநிதித்துவ ரீதியாகவும் பெரும் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது.

காலத்துக்குக் காலம் சிங்கள, தமிழ் அரசியல் தலைவர்களால் பசப்பு வார்த்தைகளும், வாக்குறுதிகளும்

வழங்கப்பட்ட போதிலும், உண்மையாக அதிகாரப் பிரயோகத்தைப் பொறுத்தவரையில் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் உரிமைகளையும், சலுகைகளையும், வெட்டிக்குறைத்து முற்றாக நாசமாக்கும் முயற்சிகளே இடம்பெற்றிருக்கின்றன. தற்போதைய போக்தை, கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பாரதூரமாகச் சிந்தித்து, தமது சட்டநிலைத்தகவுள்ள உரிமைகளைப் பொருத்தமான முறையில் பாதுகாத்துக் கொள்வதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியோராயுள்ளனர். இப்பொழுது பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கபடாவிடில், அது தற்போதுள்ள பரம்பரைக்கு மட்டுமன்றிக் கிழக்கு மாகாணத்தில் இனி முஸ்லிம்களாய்ப் (சோனகர்) பிறக்கவிருப்போருக்கும் இழைக்கப்படும் பெரும் துரோகமாகும்.

*1989* ஜுலை 25ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன அவர்களால் முன்வைக்கப்பட்ட, மாகாண சபைகளுக்கு அதிகாரப்பகிர்வு செய்வதற்கான பிரேரணைகளில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

12. மாகாண சபைகளை உருவாக்கும் பொருட்டு மாவட்ட நிர்வாக அடிப்படையில், விகிதாசாரம் பிரதிநிதித்துவ முறையின் பிரகாரம் ஒவ்வொரு மாகாணத்துக்கும் தேர்தல்கள் இடம்பெறும், மாகாணத்துள் இருக்கும் ஒவ்வொரு மாவட்டத்தினதும் ஜனத்தொகை மற்றும் நிலப்பரப்பு அடிப்படையில் மாகாண சபைகளுக்குத் தெரிவாகும் அங்கத்தவர்களின் தொகை தீர்மானிக்கப்படும்.

16. எந்தவொரு ஜனசமூகத்தின் பீதிகளைப் போக்குவதற்கு அரசாங்கம் பின்வரும் மேலதிக ஆலோசனைகளைப் பரிசிலிக்கத் தயாராகவுள்ளது.

1. நாட்டில் இருக்கும் மாகாண சபைகள் ஒன்றோடொன்று கலந்தாலோசனை செய்யவும் மற்றும் பரஸ்பர நலன்கள் குறித்த விடயங்களைக் கூட்டாகச் செயலாற்றவும் இயலக்கூடியதாக பொருத்தமான நிறுவனரீதியான ஏற்பாடுகளைச் செய்தல்.

2. ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள இனத்துவக் குழுக்கள் மாகாண அரசாங்கத்தில் பங்கு பற்றுவதை உறுதிப்படுத்தக்கூடியதாகப் பொருத்தமான சட்டம் மற்றும் நிறுவன ரீதியான ஏற்பாடுகளைச் செய்தல்.

3. இனத்துவக் குழுக்களுக்கு மாகாண அரசின் கட்டுப்பாட்டின் கீழ் பெருமளவிலான உள்ளூர்தன்னாட்சியைக் கொடுக்கும் அலகுகளைத் தாபித்தல். இவை:

(அ) இனவாரியான உ.அ.அ. பிரிவுகள்.

(ஆ) உ.அ.அ. பிரிவுகளில் பிரதேச சபைகள்.

(இ) ஏனைய உள்ளூர் தன்னாட்சி மன்றங்கள்.

இலங்கை - இந்தியா ஒப்பந்த ஏற்பாடுகளின் படியும் அதிமேதகு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் பிரேரணைகளின் பிரகாரமும் இலங்கை முஸ்லிம்களின் (சோனகர்) பாரம்பரிய வாழிடப் பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் வடகிழக்கு மாகாணங்களில் பின்வரும் முறையில் அதிகாரப் பகிர்வு செய்யும் அரசியல் மற்றும் நிருவாக உபதேசிய அலகுகள் உடனடியாகத் தாபிக்கப்படுதல் வேண்டும்.

1. முன்னைய நான்கு (4) முஸ்லிம் பெரும்பான்மை பெரும்பாக இறைவரி அலுவலகப் பிரிவுகளாகிய பாணமைப்பற்று, அக்கரைப்பற்று, சம்மாந்துறைப்பற்று, மற்றும் கரவாகு, நிந்தவூர்ப்பற்று, வெவகாமம்பற்று உ.அ.அ. பிரிவுகளை உள்ளடக்கித் தற்போதைய அம்பாரை மாவட்டத்தில் ஒரு முஸ்லிம் (சோனகர்) பெரும்பான்மை நிர்வாக மாவட்டம் உருவாக்கப்படுதல்.

2. காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை என்பனவற்றில் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசசபைகளை அமைத்து முஸ்லிம்களின், வரலாற்று, வாழிடப்பிரதேசங்களையும் விவசாயக்காணிகளையும், இயற்கை மூலவளங்களையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 24% ஆகிய முஸ்லிம் ஜனத்தொகை விகிதாசாரத்துக்கேற்ப பகிர்ந்தளித்தல்.

3. முஸ்லிம் வரலாற்று வாழிடப் பிரதேசங்களை உள்ளடக்கி, கிண்ணியா, மூதூர் குச்சவெளி மற்றும் தம்பலகாமத்தில் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேச சபைகளை உருவாக்கி, விவசாயக் காணிகளை மற்றும் இயற்கை மூலவளங்களை திருமலை மாவட்டத்தில் முஸ்லிம் சனத்தொகை விகிதாசாரமாகிய 29% கேற்ப பகிர்ந்தளித்தல்.

4. முஸ்லிம் வரலாற்று வாழிடங்களை உள்ளடக்கி, எருக்கலம்பிட்டியிலும், முஸலியிலும் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேச சபைகளை உருவாக்கி மன்னார் மாவட்டத்தில் 27% மாகவிருக்கும் முஸ்லிம் ஜனத்தொகை விகிதாசாரத்துக்கேற்ப, விவசாயக் காணிகள் மற்றும் இயற்கை மூலவளங்களைப் பகிர்ந்தளித்தல்.

5. சம்மாந்துறை, காத்தான்குடி, மற்றும் கிண்ணியா பட்டினச்சபைப் பிரதேசங்களில் நகரசபைகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

6. கல்முனைப் பட்டினசபை பிரதேசத்தில் ஒரு மாநகரசபை உருவாக்கப்படுதல்.

7. அம்பாரை, திருகோணமலை, மட்டக்களப்பு, மற்றும் மன்னார் மாவட்டங்களில் முஸ்லிம் பெரும்பான்மை உள்ளூராட்சி அதிகார சபைகளை இணைத்து முஸ்லிம் நிருவாக மாவட்டத்தை உருவாக்குவதற்கு உடனடி ஏற்பாடுகள் செய்யப்படுதல்.

8. மாகாணசபைத் தேர்தல் நோக்கங்களுக்கு வடகிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்தப்படும் சகல முஸ்லிம் நிர்வாக மாவட்டங்களும் மாகாணங்களின் தேர்தல் மாவட்டங்களாகக் கணிக்கப்படுதல் வேண்டும். விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் இணைந்த மாகாண சபைக்குப் போதியளவு அங்கத்தினர்களை முஸ்லிம் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்வதை உறுதிப்படுத்துவதற்கான ஒரேவழி இதுவேயாகும். வெட்டுப்புள்ளி முற்றாக நீக்கப்படல் வேண்டும்.

9. 1979ல் எல்லை மீள்வரைவு ஆணைக்குழு கிழக்கு மாகாணத்தில் இருந்து ஜனப்பிரதிநிதிகள் சபையாகிய பாராளுமன்றத்துக்குப் பிரதிநிதிகளைத் தீர்மானிக்கும் விடயத்தில் தமிழர்களுக்கு ஐந்து தேர்தல் தொகுதிகளையும், முஸ்லிம்களுக்கு ஐந்து தேர்தல் தொகுதிகளையும், சிங்களவர்களுக்கு இரண்டு தேர்தல் தொகுதிகளையும் எல்லை மீள்வரைவு செய்தது. இந்த அடிப்படையில் தற்போதைய பாராளுமன்றத்தில் 42% தமிழ் உறுப்பினர்களும், 42% முஸ்லிம் உறுப்பினர்களும், 16% சிங்கள உறுப்பினர்களும் உள்ளனர். கிழக்கு மாகாணத்தில் இனத்துவ ஜனசமூகங்களுக்கு ஒதுக்கியழிக்கப்படும் இந்த அங்கத்துவ விகிதாசாரம் தொடர்ந்து பேணப்படுதல் வேண்டும்.

10. கிழக்கு மாகாணத்தில் கேந்திர முக்கியத்துவம், இயற்கை மூலவளங்கள், மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக சமீபத்திய எதிர்காலத்தில் ஜனத்தொகை அதிகரிக்கும் என்னும் எதிர்பார்ப்பு என்பவை காரணமாக அதற்கு அதிகரித்த பிரதிநிதித்துவம் வழங்கப்படுதல் வேண்டும். மேலும் வடமாகாணத்தைப் பார்க்கும் போது கிழக்கு மாகாணத்தின் நிலப்பரப்பும் ஆயிரம் சதுர கிலோ மீற்றர் அதிகமானதாகும். இங்குள்ள மக்கள் இணைப்பின் நன்மை கருதி தமது சபையை தியாகம் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள் 53%

மாகவேனும் உயர்த்தப்படுதல் வேண்டும்.

11. வடமாகாணத்துக்கான அங்கத்துவத்தின் முஸ்லிம்கள், சிங்களவர்களான சிறுபான்மை இனங்களுக்கு போதிய முக்கியத்துவம் அளிக்கப்படுதல் வேண்டும். இணைந்த மாகாண சபையில் 60% தமிழர்களும், 30% முஸ்லிம்களும், 10% சிங்களவர்களும் இருத்தல் வேண்டும்.

12. தமிழ்பேசும் இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் கீழ் இரண்டு இனத்துவ சபைகள் இருத்தல் வேண்டும் (1) தமிழ் பேசும் தமிழர்களுக்கும், (2) தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கும் அவை அதிகாரப் பகிர்வுக்கான சமமான அந்தஸ்தை கொண்டனவாய் இருத்தல் வேண்டும்.

13. சட்டம், ஒழுங்கைப் பொறுத்தவரையில் தமிழ் இனத்துவ சபைக்கு பகிர்வு செய்யப்படும் தத்துவங்களும் கருமங்களும் முஸ்லிம் இனத்துவ சபைக்கும் பகிர்வு செய்யப்படல் வேண்டும்.

14. அமைச்சர்கள் சபையில் 30% க்கும் குறையாது அமைச்சர்கள் முஸ்லிம் இனத்துவ சபையைச் சேர்ந்தவர்களாக இருப்பதை உறுதி செய்யும் ஏற்பாடுகள் அவசியமாகும்.

15. இணைந்த மாகாண சபையின் முதலமைச்சரும், பிரதியமைச்சரும், முறையே தமிழ் இனத்துவச் சபையின் பிரதம அமைச்சரும், முஸ்லிம் இனத்துவ சபையின் பிரதம அமைச்சருமாக இருத்தல் வேண்டும்.

16. முஸ்லிம் (சோனகர்) இனத்துவ சபையின் கீழ் முஸ்லிம்களுக்குப் பல்கலைக்கழகம் மட்டம் வரையில் தனியான கல்வி வசதிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

17. முஸ்லிம்களுக்கு அரச காணிகள் உரித்து, கிழக்கு மாகாணத்தில் 33%க்கும் குறையாமலும், மன்னார் மாவட்டத்தில் 30%க்கும் குறையாமலும் வடமாகாணத்தில் எஞ்சிய பிரதேசங்களில் 10%க்கும் குறையாததாகவும் இருத்தல் வேண்டும்.

18. முஸ்லிம் (சோனகர்) இனத்துவ சபையின்கீழ் வரும் முஸ்லிம்களுக்கு இணைந்த மாகாணசபை வேலை வாய்ப்புக்களில் 30%க்கு குறையாமல் வழங்கப்படுதல் வேண்டும்.

19. முஸ்லிம் (சோனகர்) இனத்துவ சபையின் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களில் நான்கில் மூன்று பொரும்பான்மையினரின் அங்கீகாரமின்றி, மாகாண சபையின், முஸ்லிம் (சோனகர்) இனத்துவ சபையின் அரசியல் மற்றும் நிர்வாகத் தத்துவங்களைப் பாதிக்கும் எந்தவிதமான நியதிச் சட்டமும் நிறைவேற்றப்படலாகாது.

20. ஒப்புரவான ஏற்பாடு எதுவும் செய்யப்படும் போது இத்தகைய ஏற்பாடு எவ்வகையிலும் <u>அரசியல் மற்றும் நிர்வாக நோக்கங்களுக்கான வடகிழக்கு மாகாணங்களின் ஒரு இணைந்த பிராந்தியத்தைப் பாரபட்சமாகப் பாதிப்பதாக அல்லது குடை கவிழ்ப்பதாக இருத்தலாகாது.</u>

21. நாம் கோரியுள்ள மேற்கூறிய ஏற்பாடுகள் 1986 ஜுன் 25ம் திகதி அதிமேதகு ஜனாதிபதியவர்கள் மாகாணசபைக்கு அதிகாரப் பகிர்வு செய்வது சம்பந்தமாக வெளியிட்ட பிரேரணைகளினதும், 1987 ஜுலை 29ம் திகதி இந்திய இலங்கை ஒப்பந்தத்தினதும் செயற்பாட்டு எல்லைக்குள் வருகின்றன.

அரசியல் மற்றும் நிர்வாக நோக்கங்களுக்கா, வடகிழக்கு மாகாணத்தை தனிப்பிராந்தியத்தின் சுயாதீனத்தைப் பேணுவதற்கும் முஸ்லிம் மக்கள் சமத்துவம், பாதுகாப்பு,

அமைதி, சந்துஷ்டி மற்றும் அபிலாசசைப் பூர்த்தி என்பனவற்றோடு வாழ்வதற்கும் இந்த ஏற்பாடுகள் இன்றியமையாதவை. இப்பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாதுவிடின் அது வடகிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகமாகவே கணிக்கப்படும்.

| | |
|---|---|
| (ஒப்பம்) | (ஒப்பம்) |
| கலாநிதி பதியுத்தீன் முஹ்முத் | அப்துல் அஸீஸ் |
| தவிசாளர், | செயலாளர் நாயகம் |
| இலங்கை முஸ்லிம் கவுன்சில் | இலங்கை முஸ்லிம் கவுன்சில் |

## 7. தமிழர் விடுதலைக் கூட்டணி

தலைவர் :
மு.சிவசிதம்பரம்
செயலாளர் நாயகம்
அ.அமிர்தலிங்கம்

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
இலங்கை.
17 செப்டெம்பர் 1987.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழிடங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. த.வி.கூ முஸ்லிம்களின் தனித்தவத்தை அங்கீகரிக்கின்றது.

முழு நாட்டில் மட்டுமின்றி வட-கிழக்கு மாகாணத்திலும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராவர். இதனடிப்படையில் த.வி.கூ பின்வரும் ஆலோசனைகளை முன்வைக்கிறது.

(1) காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, கிண்ணியா, மூதூர் தம்பலகாமம் (முள்ளிப் பொத்தானை) எருக்கலம்பிட்டி மற்றும் முசலியில் பெரும்பான்மை உ.அ.அ. பிரிவுகளை ஏற்படுத்துதல். இப்பிரிவுகள் ஒவ்வொன்றிலும் உள்ளடக்கப்படவிருக்கும் பிரதேசங்கள் முஸ்லிம் வரலாற்று வாழிடங்கள், நிலம் மற்றும் மூலவளங்கள் குறித்துக் கலந்துரையாடல்களின் பின்னர் முடிவு செய்யப்படல் வேண்டும்.

(2) கல்முனை மாநகர சபையும், சம்மாந்துறை, காத்தான்குடி மற்றும் கிண்ணியாவில் நகர சபைகளும் அமைத்தல். இச்சபைகளின் ஆட்புல எல்லைகள் குறித்துக் கலந்துரையாடி முடிவு செய்யப்படல் வேண்டும்.

(3) த.வி.கூ. தனது பிரேரணையில் முஸ்லிம்களுக்குப் போதிய பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யும் வகையில் மாகாண சபைக்கான அங்கத்தவர்கள் ஆட்புல தேர்தல் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டுமென்ற ஆலோசனையை முன்வைத்திருந்தது. மாகாணசபைகளில் அங்கத்தவர்கள் தொகையை 1,000 சதுர கிலோ மீட்டருக்கு ஒரு அங்கத்தவர் மற்றும் 30,000 ஜனத்தொகைக்கு ஒரு அங்கத்தவர் என்ற அடிப்படையில் தீர்மானிக்க வேண்டுமென்று கூறியிருந்தோம். அரசாங்கத்தின் பிரேரணை, நிர்வாக மாவட்டத்தைத் தேர்தல் தொகுதியாகக் கொண்டு, விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படிடையில் நிலப்பரப்புக்கு ஒதுக்கப்படும் அங்கத்தவர்களைவிட மேலதிகமாக, 40,000 ஜனத்தொகைக்கு ஒரு அங்கத்தவரைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதாகும். இந்த அடிப்படையில் வட-கிழக்கு மாகாணத்துக்கு 71 அங்கத்தினர்கள் இருப்பார்கள். அதாவது வட மாகாணத்திலிருந்து 36 பேரும், கிழக்கு மாகாணத்திலிருந்து 35 பேரும். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் 32.7% ஆகவும், வடமாகாணத்தில் 4.73% ஆகவும் உள்ளனர். முஸ்லிம் தூதுக்குழுவோடு பூரணமாக கலந்துரையாடிய பின்னர் கிழக்கிலிருந்து 12 பேருக்கும் குறையாத அங்கத்தவர்களையும், வடக்கிலிருந்து 5 பேருக்குக் குறையாத அங்கத்தவர்களையும் தெரிவு செய்து அனுப்புவதை உறுதிப் படுத்துவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதை த.வி.கூ ஏற்றுக் கொள்கின்றது.

(4) வட-கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சராக ஒரு முஸ்லிம் தெரிவு செய்யப்படாத பட்சத்தில் பிரதி முதலமைச்சர் ஒரு முஸ்லிமாகவிருப்பதை உறுதிப்படுத்துவதற்குச் சட்ட ஏற்பாடுகள் செய்யப்படும். முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சருட்பட, அமைச்சர்கள் சபையில் 25%க்குக் குறையாதோர் முஸ்லிம்களாக இருப்பதற்கு உறுதி செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

(5) எதிர்காலத்தில் அரச காணிகள் ஒதுக்கீடு சம்பந்தமான விடயத்தில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்குரிய பங்கு 35%க்கும் குறைவாக இருக்காது. மன்னாரில் 30%க்குக் குறையமாட்டாது. வடமாகாணத்தில் எஞ்சிய பகுதிகளில் அது 10%க்குக் குறையாது.

(6) பொதுத்துறை வேலைவாயப்பில் முஸ்லிம்களுக்குரிய பங்கு, வட-கிழக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் அவர்கள் விகிதாசாரத்துக்குக் குறைவாக அமையமாட்டாது.

(7) பல்கலைக்கழகம் வரையில் முஸ்லிம்களுக்குத் தனியான கல்வி வசதிகள் வழங்கப்படும். பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் கல்வியில் பின்தங்கிய குழுக்கள், பிரதேசங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு விசேட கவனிப்பு வழங்கப்படும்.

(8) முஸ்லிம் அங்கத்தவர் பெரும்பான்மை ஒன்று சாதகமாக வாக்களித்தாலன்றி முஸ்லிம்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்கும் எந்த நியதிச் சட்டமும் வடக்கு கிழக்கு மாகாண சபையினால் நிறைவேற்றப்பட மாட்டாது.

(9) முஸ்லிம் கவுன்சிலின் நிருபத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ஏனைய விடயங்கள் குறித்து எமது கருத்தை ஏற்கனவே தெரிவித்துள்ளோம். இந்த விடயம் இருசாராராலும் மேலும் ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

| | |
|---|---|
| மு.சிவசிதம்பரம் | அ.அமிர்தலிங்கம் |
| தவிசாளர் | செயலாளர் நாயகம், |
| த.வி.கூ | த.வி.கூ |

## 8. தமிழீழ விடுதலைப்புலிகள் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி

### கூட்டறிக்கை

டாக்டர் அல்-ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களது தலைமையில் இலங்கியல் இருந்து வருகை தந்த முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிப் பிரமுகர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்குமிடையே சென்னையில் 1988 ஏப்பரல் 15ம், 16ம், 19ம் திகதிகளில் நடைபெற்ற கலந்துரையாடல்களின் போது, பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டதில் இருதரப்புக்குமிடையே கொள்கைகள் ஒத்ததாக இருந்ததென்பதை அறியக்கூடியதாக இருந்தது.

1. இலங்கைவாழ் முஸ்லிம்கள் தமிழ் மொழியைப் பேசுபவர்களாக இருப்பினும் அவர்கள் வேறுபட்ட தனித்துவத்தைக் கொண்ட, தமிழ்த் தேசியத்தினுள் உள்ள ஒரு தனி இனக்குழு என்பதனையும், வடக்கு கிழக்கு மாகாணம் ஏனைய தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகமாக உள்ளது போலவே, முஸ்லிம்களதும் பாரம்பரிய தாயகமாகவுள்ளது என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம்.
2. வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த தாயகத்தில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் ஐக்கியத்துடனும், சமாதானத்துடனும் வாழவேண்டும் என்பதனையும், முஸ்லிம்கள் இப்பிரதேசங்களில் சிறுபான்மையினராக வாழுகின்ற காரணத்தினால் அவர்கள் அச்சம், பயம், சந்தேகமற்று வாழவேண்டியதும் முக்கியமாகையால் அவர்களது பாதுகாப்பையும், சமமான உரிமைகளையும், சுதந்திரத்தையும் உத்தரவாதப்படுத்த வேண்டியது அவசியம் என்று உணரப்படுவது மாத்திரமன்றி, கொள்கையும் என்பதால், முஸ்லிம்கள் அச்சம், சந்தேகம், பயமற்று வாழ்வதற்கான சூழ்நிலைகள் உடனடியாக

ஏற்படுத்தப்படுவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவர் என்பதையும், முஸ்லிம்கள் பாதுகாப்புடன் வாழ்வதற்கு எதிர்பார்க்கப்படும் முழு உத்தரவாதமும் சட்டரீதியாக வழங்கப்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம்.

3. தாயகத்தில் முஸ்லிம் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் எனவும், தாயகத்தில் உரிமைகளை வென்றெடுப்பதற்காக முஸ்லிம் மக்கள் ஏனைய தமிழ் பேசும் மக்களுடன் பெருமளவு இணைவதன் மூலமாகத்தான் தமது மண்ணையும் கலாசாரத்தையும் காப்பாற்ற முடியுமென்பதையும், முஸ்லிம் மக்களின் நலனுக்காக, தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாகப் பாடுபட்டு வருவார்கள் என்பதும் உறுதியாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4. முஸ்லிம்களினதும், ஏனைய தமிழ் பேசும் மக்களினதும் அபிலாஷைகள் பாதிக்கப்படாத வகையில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் முழுமையாக அமுலாக்கப்படுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியும் ஒத்துழைப்பு வழங்குவர்.

5. மாகாண சபைக்கான 13வது அரசில் சட்டத்திருத்தம் முஸ்லிம் மக்களினதும், ஏனைய தமிழ் பேசும் மக்களினதும் அடிப்படை அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யவில்லை. இச்சட்டத்திருத்தம் இந்திய இலங்கை உடன்பாட்டிற்கு முரணான வகையில் சட்டமாக்கப்பட்டுள்ளது. மேலும் 13வது சட்டத்திருத்தினுள் உள்ளடங்கிய சில சரத்துகளும், இந்திய - இலங்கை உடன்பாட்டிற்கு முரணானதாகவுள்ளது. இந்நிலையில் 13வது அரசியல் திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

6. முஸ்லிம் மக்களினது உரிமைகளைப் பாதுகாக்கவும், ஆட்சியதிகாரங்களை நியாயமான முறையில் பகிர்ந்து கொள்ளவும் கூடிய ஏற்பாடுகளைச் செய்யும் போது, அத்தகைய நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தின் ஒருமைப்பாட்டிற்கு பாரதூரமான குந்தகமெதுவும் ஏற்படுத்தக்கூடாது.

7. மேற்கூறியதனடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாண சபையில் ஏனைய தமிழ் பேசும் மக்களுக்குள்ள இன உரிமைகளையும், சலுகைகளையும், வாய்ப்பினையும், சுதந்திரத்தினையும் அனுபவிப்பதற்கு வடக்கு கிழக்கு மாகாணத்தை தமது தாயகமாகக் கொண்ட முஸ்லிம்கள் உரித்துடையவர்கள்.

8. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் 33% தொகையினர், வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த மாகாணத்தில் 18% தொகையினர். முஸ்லிம்கள் அதிகூடிய பாதுகாப்பை பெற்று, ஆட்சியதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பினையும் பெறக்கூடிய வகையில், ஒன்றிணைந்த தாயகத்தில் 30%த்திற்கும் குறைவில்லாத வகையில், மாகாண சபையில் பிரதிநிதித்தும் பெறுவதற்கும், அமைச்சரவையில் இடம்பெறுவதற்கும் உரித்துடையவர்கள் என்பதை ஏற்றுக் கொள்வதுடன், இவ்விதப்படியான உரித்துக்களைப் பெறுவதற்கு தேவையான அரசியல் சட்ட ஏற்பாடுகளைச் செய்வதற்கு இருதரப்பினரும் முழு முயற்சிகளையும் மேற்கொள்வர்.

9. வருங்கால அரச கணிப்பீடு முஸ்லிம்களுக்கு கிழக்கு மாகாணத்தில் 35% குறைவில்லா வகையிலும், மன்னார் மாவட்டத்தில் 30% குறைவில்லாத வகையிலும், வடமாகாணத்தில் ஏனைய பகுதிகளில் 5% குறைவில்லாத வகையிலும் இருக்க வேண்டும்.

10. வடக்கு கிழக்கு தாயகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வாழும் முஸ்லிம்களின் விகிதாசாரத்தின்படி, பொதுத்துறை வேலைவாய்ப்பிற்கான உரிமையை முஸ்லிம்கள் கொண்டிருப்பர்.

11. கல்வித் துறையில் எல்லா இடங்களிலும் சமவாய்ப்புகள் பேணப்படும் வரை பல்கலைக்கழக அனுமதியின் போது, கல்வித்துறையில் பின்தங்கியுள்ள பிரதேசங்களில் விசேட கவணிப்பு செலுத்தப்படும். பல்கலைக்கழகம் வரையிலான பிரத்தியோக கல்வி வசதிகள் முஸ்லிம்களுக்காக ஏற்படுத்தப்படும். முஸ்லிம் மக்களுக்காக இஸ்லாமிய பல்கலைக்கழகம் நிறுவப்படும்.

12. முஸ்லிம் மக்களது தனித்துவத்தின் உரிமைகள், அக்கறைகள் என்பனவற்றை பாதிக்கக்கூடிய எதுவித சட்டவாக்கங்களும், அவற்றிற்கு முஸ்லிம் பிரதிநிதிகள் 3/4 பெரும்பான்மையினர் சார்பாக வாக்களித்தாலன்றி, வடக்கு கிழக்கு மாகாண சபையினால் நிறைவேற்றப்படலாகாது.

13. வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக ஒரு முஸ்லிம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலன்றி அம்மாகாண சபையின் பிரதி முதலமைச்சராக ஒரு முஸ்லிம் நியமிக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும்.

14. வடக்கு கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் அவர்கள் அரசியல், நிர்வாக அபிவிருத்தி அலகுகள் பல்வேறு மட்டங்களில் உருவாக்கப்படுதல் வேண்டும். இது பற்றி விடுதலைப் புலிகள் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். இவற்றுள் உள்ளடக்கப்பட வேண்டிய பாரம்பரிய எல்லைகள், மூலவளங்கள் என்பன பற்றி மேலும் இரு பகுதியினரும் ஆய்வு நடத்தி இறுதிமுடிவு மேற்கொள்ளப்படும்.

15. தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை அபகரிக்கும் நோக்கத்துடனும், அங்குள்ள இனப்பரம்பலை மாற்றியமைக்கும்

வகையிலும் அவர்களது பொருளாதார, அரசியல், நிர்வாக பலத்தினை முறியடிக்கும் கொள்கையுடனும் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட அரச குடியேற்றங்களால் ஏற்பட்ட பாதிப்புக்களைக் களையும் வகையில் ஒரு குடியகல்வுக் கொள்கை உருவாக்கப்படுதல் வேண்டும்.

16. தமிழ் பேசும் மாகாண சபைக்காக நடக்கவிருக்கும் எதிர்வரும் தேர்தல் நியாயமான அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலைக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வாக்காளர் பட்டியல் எந்த ஆண்டினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதை பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

17. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் போர் நடவடிக்கைகளினால் உண்மையில் அப்பாவி மக்களே சொல்லொண்ணாப் பெருந்தொல்லைக் குள்ளாகின்றனர். மக்கள் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்ப போர் நிறுத்தம் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும்.

18. யுத்த நிறுத்தத்திற்குப் பின்னர் மக்கள் இயல்பான வாழ்க்கைக்கு திரும்பி முறையாக மாகாணசபைத் தேர்தல் நடக்கும் வரையும் இடைக்கால நிர்வாக அரசு ஒன்று அவசியமாகும். இந்த இடைக்கால நிர்வாக அரசில் ஏற்கனவே இது தொடர்பில் செய்யப்பட்ட முடிவின் பிரகாரம் அங்கத்துவம் அமைதல் வேண்டும்.

சதாசிவம் கிருஷ்ணகுமார்
மத்தியகுழு உறுப்பினர்
தமிழீழ விடுதலைப் புலிகள்
21.04.1988.

எம்.ஐ.எம்.மொஹியத்தீன்
செயலாளர் நாயகம்
மு.ஐ.வி.முன்னணி
21.04.1988.

## 9. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

கே. 1. வடக்கினதும், கிழக்கினதும் இணைப்பு நிரந்தரமானதாக இருக்க வேண்டுமா? இப்படியானால் வாக்கெடுப்பு இல்லாமல் செய்யப்பட வேண்டுமா?

ப. 1. இந்த வினா 'ஆம்' என்ற விடையை எதிர்பார்த்து எழுப்பப்பட்டால் வாக்கெடுப்பு அவசியமற்றது.

விடை இல்லை' எனில் இந்திய - இலங்கை ஒப்பந்தப்படி வாக்கெடுப்பை அலட்சியம் செய்ய முடியாது.

கே.2. முதலாவது கேள்விக்கு விடை ஆம் எனில், வடகிழக்கில் முஸ்லிம்களினதும், சிங்களவர்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்துவது எப்படி?

ப. 2. உட்கிடையாக இலங்கை அரசாங்கம் ஒரு நிரந்தரமான இணைப்பின் கீழ் வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம்களினதும் சிங்களவர்களினதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட மாட்டாவென்று சரியாக உணர்வது தெளிவாகின்றது. முஸ்லிம்களினதும் சிங்களவர்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான பிரேரணைகள்.

**பிரேரணை 1**

(i) **சிங்களப் பிரதேசங்களைப் பிரித்தல்**

1971இல் இருந்த இனத்துவ விகிதாசாரங்களைப் பிரதிபலிக்கும் வகையில் வடக்கு கிழக்கின் எல்லைகளை மீள்வரைபு செய்து சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசங்களை விடுத்து, அவற்றை அருகாமையாகவுள்ள சிங்கள மாகாணங்களுடன் இணைத்தல் வேண்டும்.

(ii) **இனவாரியான பிரதேச எல்லைகளை உருவாக்குதல்**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் பிரதேசங்களில் விவசாய நிலங்களும் அரச காணிகள் உள்ளிட்ட இயற்கை மூல வளங்களும் 1971லிருந்த விகிதாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் எல்லைகள் மீள்வரைபு செய்யப்பட்டு குறிப்பிட்ட ஜனசமூகத்தின் வாழிடங்கள் அவற்றுள் வரக்கூடியதாக இனவாரியான பிரதேச சபைகள் உருவாக்குதல் வேண்டும்.

(iii) **வடமாகாண சபை**

எல்லை மீள்வரைபு செய்யப்பட்ட வடமாகாணத்தில் தமிழ்ப் பெரும்பான்மை பிரதேச சபைக்கு ஒரு வடமாகாண சபையை உருவாக்குதல்.

(iv) **கிழக்கு மாகாண சபை**

எல்லை மீள்வரைபு செய்யப்பட்ட கிழக்கு மாகாணத்தில் தமிழ்ப் பெரும்பான்மைப் பிரதேசங்களுக்கு ஒரு கிழக்கு மாகாண சபையை உருவாக்குதல்.

(v) **அத்தோடு, தென்-கிழக்கு மாகாண சபை**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்களுக்கு ஒரு தென்கிழக்கு மாகாணசபையை உருவாக்குதல்.

**பிரேரணை 2**

பிரச்சினையைத் தீர்க்கும் மாற்றுவழி ஒன்றிணைந்த வடக்கு கிழக்கில் அந்தஸ்திலும் தத்துவங்களிலும் சமமான அதிகாரப் பகிர்வுக்கான மூன்று உபஅலகுகளை ஏற்படுத்துவதும், மூன்று இனத்துவ சமூகங்களாலும் சமமாக பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட இணைந்த வடகிழக்கின் பொதுவான நலன்களை நிர்வாகம் செய்வதற்கான ஒரு சபையையும் ஏற்படுத்தல்.

வடகிழக்கில் உள்ள முஸ்லிம்களினதும், சிங்களவர்களினதும் நலன்கள் சமமான அந்தஸ்த்தும் பலமும் உள்ள இனவாரி அதிகாரப் பகிர்வு அலகுகளை உருவாக்குவதன் மூலமே பாதுகாக்கப்பட முடியும்.

கே.3. மாகாண சபைகளின் எல்லைகளின் மீள்வரைவு அவசியமெனில் இதைச் செய்வது எவ்வாறு?

ப. 3. தயவுசெய்து வினா 2க்கான விடையில் பிரேரணையைப் பார்க்கவும்

கே.4. மாகாணசபை முறையை பலப்படுத்தப்பட வேண்டிய விடயப்பரப்புகள் எவை?

ப. 4. மாகாண சபைகளின் அதிகாரங்களை அதியுயர்வாக்கும் நோக்கத்துடன் ஒரு நல்லிணக்கம் காணப்படுதல் வேண்டும். மேலும் பிரதேச மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய விதத்தில் பிரதேச சபைகளின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.

கே.5. குடியேற்றப் பிரச்சினைகளை மிகச் சிறந்த முறையில் தீர்ப்பது எப்படி?

ப. 5. வினா 2க்கான முதலாவது பிரேரணை நடைமுறைப்படுத்தப்பட்டால் குடியேற்றப் பிரச்சினைகள் எழமாட்டா.

கே.6. முஸ்லிம்களுக்கென தனியாக மாகாணசபை ஒன்று தாபிக்கப்பட்டால் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவது எவ்வாறு?

(அ) கூட்டமைப்பு

(ஆ) பல்வேறு ஜனசமூகங்களிடையே கூடுதல் புரிந்துணர்வு

ப. 6. (அ) முஸ்லிம்களுக்கான தனியான மாகாண சபையின் கூட்டமைப்புக்கான அம்சங்கள்

1. அது இதற்கு முன்னர் விளக்கமளிக்கப்பட்டது போன்று எல்லை மீள்வரைவு செய்யப்பட்ட முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபைகளைக் கொண்டிருக்கும்.

2. அம்பாரை மாவட்டத்தில் முன்னைய கல்முனை, சம்மாந்துறை, மற்றும் பொத்துவில் தேர்தல் தொகுதிகள் எல்லை மீள்வரைவு செய்யப்பட்டு இந்த முஸ்லிம் மாகாண சபையின் புவியியல் ரீதியில் நிலத்தொடர்பற்ற மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபைகளான காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, கிண்ணியா, மூதூர், தம்பலகாமம், புல்மோட்டை, மன்னார் தேர்தல் மாவட்டங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

3. இத்தளத்துடன் புவியியல் ரீதியில் நிலத்தொடர்பற்ற மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபைகளான காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, கிண்ணியா, மூதூர், தம்பலகாமம், புல்மோட்டை, மன்னார் மற்றும் முசலி என்பவை இணைக்கப்படுதல் வேண்டும்.

4. இத்தனியான மாகாணப் பிராந்திய சபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக இனவாரியான தேர்தல் மாவட்டங்கள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

5. தளப்பிரதேசத்தில் மாகாணச் செயலகம் அமைவதோடு, மாகாண சபையின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் கூட்டிணைப்பு அமுலாக்கம் மற்றும் மேற்பார்வைக்கென ஒவ்வொரு மாவட்டத்துக்குமென ஓர் உபநிர்வாக அலகு ஏற்படுத்தப்படல் வேண்டும்.

6. இப்பிரதேசங்களை நிர்வாகம் செய்யவும், அபிவிருத்தி செய்யவும், சட்டம் ஒழுங்கு நிலைமையைப் பேணவும் மாகாண

சபையின் பிரதேச சபைகளுக்கு மேலும் அதிகரித்த தன்னாட்சி வழங்கப்படும்.

7. அருகமைவான மாகாணங்களிடையே பொதுவான நலன்கள் குறித்த விடங்களில் மாகாணங்களுக்கு இடையிலான ஏற்பாடுகள் மாகாண சபைகள் எடுக்கும் தீர்மானங்களுக்கேற்ப அமைதல் வேண்டும்.

ப. 6. (ஆ) மேலும் புரிந்துணர்வு

தனியான மாகாணசபை ஏற்பாடு இல்லாமையால் இந்த இனத்துவ சமூகங்களிடையே பரஸ்பர புரிந்துணர்வும் நம்பிக்கையும் சீரழிந்துபோயுள்ளன. ஆகவே இவற்றை மீண்டும் அபிவிருத்தி செய்து கட்டியெழுப்புவதற்கான ஒரே வழி இந்த ஜனசமூகங்களுக்குத் தனியான மாகாண சபைகளை வழங்குவதாகும்.

கிழக்கிலுள்ள தமிழர்களும் முஸ்லிம்களும் பரஸ்பரம் ஒருவரிலொருவர் தங்கிவாழ வேண்டியுள்ளதால் கிழக்கில் தமிழர் பெரும்பான்மைப் பிரதேச சபைகளுக்கு ஒரு மாகாணசபை உருவாக்கப்படவேண்டியது அவசியமாகும். இவ்விரண்டு தனியான மாகாண சபைகளின் அரசியல் தலைமைத்துவங்கள் மேலும் சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வழிகளை எப்பொழுதும் கைக்கொள்ளும்.

(ஒப்பம்) எம்.ஜே.ஏ.சஹீட்
பொதுச்செயலாளர்
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்
# அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அதிகாரப்பகிர்வு அலகுபற்றிச் சமர்ப்பித்த ஆலோசனைகளின் சாராம்சம்

## 1995 மே 26

சபையின் பிரதேச சபைகளுக்கு மேலும் அதிகரித்த தன்னாட்சி வழங்கப்படும்.

7. அருகமைவான மாகாணங்களிடையே பொதுவான நலன்கள் குறித்த விடயங்களில் மாகாணங்களுக்கு இடையிலான ஏற்பாடுகள் மாகாண சபைகள் எடுக்கும் தீர்மானங்களுக்கேற்ப அமைதல் வேண்டும்.

ப. 6. (அ) மேலும் புரிந்துணர்வு

தனியான மாகாணசபை ஏற்பாடு இல்லாமையால் இந்த இனத்துவ சமூகங்களிடையே பரஸ்பர புரிந்துணர்வும் நம்பிக்கையும் சீர்குலைந்துபோயுள்ளன. ஆகவே இவற்றை மீண்டும் [illegible] செய்து கட்டியெழுப்புவதற்கான [illegible] வழி இந்த [illegible] வழங்குவதாகும்.

கிழக்கிலுள்ள தமிழர்களும் முஸ்லிம்களும் பரஸ்பரம் ஒருவரிலொருவர் [illegible] தமிழர் பெரும்பான்மைப் பிரதேச சபைகளுக்கு ஒரு [illegible] சபை உருவாக்கப்படவேண்டியது அவசியமாகும். இவ்விரண்டு தனியான மாகாண சபைகளின் [illegible] மேலும் சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வழிகளை எப்பொழுதும் கைக்கொள்ளும்.

(ஒப்பம்) எம்.ஐ.எச்.எம். அஷ்ரஃப்
பொதுச்செயலாளர்
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

## அதிகாரப் பகிர்வு அலகு

இனத்துவ மனக்குறைகள் ஒரு சமூகத்தை அல்லது ஒரு மதத்தைச் சாந்தோருக்கு மாத்திரம் உரியதல்ல. இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் அனைவருக்கும் மனக்குறைகள் உள்ளன. இனத்துவ மனக்குறைகளைத் தீர்ப்பதற்குப் பல்வேறு அரசியல் தீர்வுகள் முன்வைக்கப்பட்டன. இப்பிரேரணைகள் அனைத்திலுமுள்ள பொதுவான அம்சம் அதிகாரப் பகிர்வுக்கான அமைப்பாகும்.

பெரிதும் மத்தியப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சிக்கும், தனிநாட்டுக்கும் இடையில் ஒரு விட்டுக்கொடுக்கும் ஏற்பாடாக, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய சகல இனத்துவக் குழுக்களாலும் ஆட்சி அதிகாரம் நியாயமாகப் பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும். அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒட்டுக்போடுவதும், அறைகுறையான நடவடிக்கைகளும் தீர்வை மேலும் சிக்கலாக்கவே உதவும். பகிர்வு செய்யப்பட்ட அதிகாரங்கள் இனத்துவக்குழுக்கள் தாம் பெரும்பான்மையாகவுள்ள பிரதேசங்களின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு தீர்மானம் எடுக்கும் செயல்முறைகளில் பூரணமாக பங்கேற்பதற்கு உதவுவதாக இருத்தல் வேண்டும்.

தற்போதுள்ள மாகாணசபைகள் சட்டத்தின்படி முஸ்லிம்களும் தமிழர் சிங்களவர்போன்று அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பில்லை. இப்போது சிங்களவர்கள் ஏழு மாகாணங்களில் பெரும்பான்மையாக உள்ளதால் அவர்கள் ஏழு சபைகளில் அதிகாரமுள்ளவர்களாய் இருக்கின்றனர். தமிழர்கள் 2 மாகாணங்களில் பெரும்பான்மையாக உள்ளதால் அவர்கள் 2 சபைகளில் அதிகாரமுள்ளவர்களாய் இருக்கின்றனர். தற்போதுள்ள எந்த மாகாணத்திலும் முஸ்லிம்கள் பெரும்பான்மை இனமாக இல்லாதிருப்பதால் அவர்கள் சிங்களவர்களைப் போன்று அல்லது தமிழர்களைப் போன்று அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள முடியாது.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இப்போதுதான் முதல் தடவையாகச் சிறுபான்மை இனங்களோடு அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆகவே இந்த முக்கியமான காலகட்டத்தில் முஸ்லிம்களாகிய நாம் அலட்சியம் செய்யப்படுவதையும், எமது சட்ட நிலைத் தகவுள்ள உரிமைகள் மறுக்கப்படுதலையும் விரும்பவில்லை. நியாயமானதும், நீதியானதுமான ஒரு தீர்வு 74% சிங்களவருக்கு 7 சபைகளையும், 18% தமிழர்களுக்கு 2 சபைகளையும், 8% முஸ்லிம்களுக்கு 1 சபையையும் உருவாக்குவதாகும்.

முஸ்லிம்களாகிய நாம் இலங்கைப் பிரஜைகள் என்றவகையில் எமது சட்ட நிலைத் தகவின்படி கிடைக்க வேண்டிய உரிமைகளுக்கு அதிகமாக எப்பொழுதும் கேட்டதில்லை. நாம் பிரிவினையைக் கோரவுமில்லை. அதற்காக எமது உரிமைகளை மறுப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

வட-கிழக்கு மாகாணங்கள் பருத்தித்துறையிலிருந்து குமண வரையில் பரந்து கிடக்கின்றன. 7,268 சதுர மைல்கள் நிலப்பரப்புக் கொண்ட அசை அண்ணளவாக முழுத்தேசத்தினதும் மூன்றிலொருபங்கு நிலப்பரப்பையும் மூன்றிலிரண்டு பங்கு கரையோரப் பிரதேசத்தையும் உள்ளடக்கியுள்ளன.

வடமாகாணம் 3,429 சதுர மைல்கள் கொண்டது. 1981 குடிசன மதிப்பு விபரப்படி ஜனத்தொகை அங்கு 1,111,468 ஆகும். தமிழர் 92%, முஸ்லிம்கள் 5%, சிங்களவர் 3%. யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலப்பரப்பு 12.8% - 440 சதுர மைல்கள். ஜனத்தொகை 738,788 - இது வடமாகாண மொத்த ஜனத்தொகையில் 67%. தமிழர் 98%, முஸ்லிம்களும், ஏனையோரும் 2% மாத்திரம். வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களான மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி என்பவற்றின் மொத்த நிலப்பரப்பு 82% - 2,989 சதுர மைல்கள் ஜனத்தொகை 370,616 - 33%.

கிழக்கு மாகாணம் 3,839 சதுர மைல்கள் நிலப்பரப்பை கொண்டுள்ளது. 1981ம் ஆண்டின் குடிசன மதிப்பு விபரங்களின் படி சனத்தெகை 993,435. தமிழர்கள் 42% ஆகவும், முஸ்லிம்கள் 33% மாகவும், சிங்களவர் 24 ஆகவும் இருந்தனர். 1016 சதுர மைல்கள் நிலப்பரப்பைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்திலேயே தமிழர்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். இங்கு தமிழர் 73%, முஸ்லிம்கள் 24%, சிங்களவர் 3%. கிழக்கு மாகாணத்தின் எஞ்சிய பகுதிகளில் 72% நிலப்பரப்பைக் கொண்ட, அதாவது 2,823 சதுர மைல்களைக் கொண்ட திருகோணமலை, அம்பாரை மாவட்டங்களில் தமிழர் சிறுபான்மையினராகவே உள்ளனர். தமிழர்கள் 26%, முஸ்லிம்கள் 37% மற்றும் சிங்களவர் 37%. கிழக்கு மாகாணத்தின் தமிழ் கிராமங்கள் முஸ்லிம் கிராமங்களைப் போன்றே புவியில் ரீதியில் நிலத்தொடர்பற்றவையாகும்.

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழர்களும், முஸ்லிம்களும் பாராளுமன்றத்திற்கும், கலைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாண சபைக்கும் சமமான பிரதிநிதிகளை தெரிவு செய்துள்ளனர். இது கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அரசியல் ரீதியாக தமிழர்களோடு சமபலம் பெற்றவர்கள் என்பதை நிருபித்துள்ளது. கிழக்கு மாகாணம் வடமாகணத்தோடு இணைக்கப்பட்டால் முஸ்லிம்களின் இனத்துவ விகிதாசாரம் அர்த்தமற்ற வெறும் 18% ஆவதோடு, அவர்களின் அரசியல் பலமும் பெரிதும் வீழ்ச்சியுறும்.

முஸ்லிம் குடிமக்களுக்கெதிரான தமிழ் போராளிகளின் தொடர்ச்சியான ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள் காரணமாக ஆயிரக்கணக்கானோர் தாம் பாரம்பரியமாக வாழ்ந்த நிலப்பிரதேசங்களை விட்டு வெளியேறியுள்ளனர். இத்தகைய பீதியுணர்வு காரணமாக முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் - (எம்.யு.எல்.எப்) - தூதுக்குழு ஒன்று 1987 செப்டெம்பரிலும், 1988 ஏப்ரலிலும் சென்னைக்கு இருதடவைகள் விஜயம் செய்து இனவாதத் தமிழ் தலைவர்களுடனும், போராளிகளுடனும் பரந்த அடிப்படையிலான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டது.

கடந்த காலங்களைப் போலவே வடக்கு-கிழக்கு பிராந்தியங்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் அன்னியொன்னியமாக வாழ வேண்டுமென்ற எமது விருப்பத்தின் பேரிலேயே நாம் எமது பரஸ்பர பிரச்சினைகளை கலந்துரையாடும் நோக்கத்தில் இத்தூதுக்குழுவாகச் சென்றிருந்தோம். உண்மையில் முன்னைநாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவும் நாம் தமிழ் தலைவர்களோடு கலந்துரையாடி அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டுமென்று கூறியிருந்தார். இதை நாம் செய்துள்ளோம்.

1987 ஜுலையில் இடம்பெற்ற இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒருபடி மேலும் முன்சென்று, கிழக்கு மாகாணத் தேர்தலில் போட்டியிட்டுத் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாணத்தில் மாகாண சபையை அமைக்க உதவியது.

ஆயினும், இந்திய - இலங்கை ஒப்பந்தமும் அரசியலமைப்புக்கான 13வது திருத்தமும், மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளும் முஸ்லிம்களின் நியாயமான சட்டநிலைத்தகவுள்ள கோரிக்கைகளை வழங்கத் தவறிவிட்டன. அவை எமது உயிர்களையும் சொத்துக்களையும் பாதுகாக்கத் தவறிவிட்டன. எமது மக்களின் சமூக பொருளாதார நலன்களை முன்னேற்றத் தவறிவிட்டன. முஸ்லிம்களின் வித்தியாசமான இனத்துவ மற்றும் அரசியல் அபிலாஷைகளை அங்கீகரிக்கத் தவறிவிட்டன. முஸ்லிம் உணர்வுகளுக்கும் அபிலாஷைகளுக்கும் காட்டப்பட்ட இத்தகைய ஊதாசீனம் ஒரு முக்கியமான அரசியல் உண்மையை வெளிப்படுத்துகின்றன. கடந்த கால ஐ.தே.கட்சி அரசாங்கம் வடகிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்குறித்து கிஞ்சித்தும் கவலைப்படவில்லை என்பதே இந்த உண்மையாகும்.

முன்னாள் ஜனாதிபதி ஜயவர்தன தனது சொந்த அரசாங்கத்தினால் மாகாண சபைச் சட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட ஏற்பாடுகளைத் தந்திரமாக ஏமாற்றும் வகையில் அவசரகாலநிலைப் பிரமாணங்களை உபயோகித்துத் தற்காலிக மாகாண இணைப்பொன்றை ஏற்படுத்திக் கிழக்கு மாகாண முஸ்லிம்களைத் தமிழரின்கீழ் வாழும் அரசியல் மற்றும் சமூக அடிமைச் சமுதாயமாக மாற்றினார். அரசியல் மற்றும் நிர்வாக நோக்கங்களுக்காக வட-கிழக்கு மாகாணங்களைத் தற்காலிகமாக ஒரு நிர்வாக அலகாக இணைத்தது தமிழர்கள் ஒருதலைப்பட்சமாக தமிழ் ஈழம் என்னும் தனிநாட்டைப் பிரகடனம் செய்வதற்கு இட்டுச் சென்றதோடு, அதிகாரப் பகிர்வு என்னும் எண்ணக்கருவையே கேலி செய்வதாகவும் அமைந்தது.

தற்காலிகமாக இணைக்கப்பட்ட வட-கிழக்கில் மாகாணசபை நிறுவப்பட்ட பின்னர் ஆயிரக்கணக்கான முஸ்லிம் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் தமிழர்களால் கொல்லப்பட்டுள்ளனர். 1989 நவம்பர் 17ஆந் திகதி தமிழ்த்தேசிய இராணுவம் ரீ.என்.ஏ அம்பாரை மாவட்டத்தில் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களை ஏக காலத்தில் தாக்கியது. 100க்கு மேற்பட்டவர்களை கொலை செய்தனர் 200 பேருக்கும் மேல் காயமுற்றனர்.

கனரக மோட்டார் மற்றும் வட-கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரால் வழங்கப்பட்ட யுத்த உபகரணங்களோடு காரைதீவு பொலிஸ் காவலரணைச் சூழ்ந்துகொண்ட ரீ.என்.ஏ. இராணுவத்தினர் முதலில் தமிழர்களை போய்விடுமாறு உத்தரவிட்டுவிட்டு 45 முஸ்லிம் பொலிஸ் ரிஸேவ் படையினரை தனியாகப் பிரித்து இரக்கமின்றி கொலை செய்தனர். இது தமிழர்களால் முஸ்லிம்களுக்கு எதிராக நன்கு திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என்பது தெளிவாக நிருபனமாகியது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் எல்.ரீ.ரீ.ஈ - இரண்டு

மணித்தியால முன்னறிவித்தலோடு முஸ்லிம்களாகிய எம்மை எமது வீடுகளிலிருந்து விரட்டினர். அவர்கள் எமது மக்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்த வேளையில் அவர்களின் முதுகில் துப்பாக்கியால் சுட்டனர். மக்காவிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த முஸ்லிம் யாத்திரிகர்களை கொன்றனர். எமது பள்ளிவாசல், பாடசாலை, நெல் வயல்கள் மற்றும் அரிசி ஆலைகளுக்குத் தீ வைத்துக் கொளுத்தியதோடு எமது கால் நடைகளையும், மீன் பிடிப்படகுகளையும் அபகரித்தனர்.

தமிழ் ஈழ யுத்தத்தின் காரணமாக வட-கிழக்குத் தமிழர் வீடுகளை விட்டு சுயமாக வெளியேறி இந்தியாவுக்கும் வேறு மேற்கு நாடுகளுக்கும் அகதிகளாகச் சென்றனர். ஆயினும், முஸ்லிம்களாகிய நாம் தமிழர்களால் எமது வீடுகளிலிருந்து விரட்டப்பட்டும்கூட எந்த முஸ்லிமும் வேறு எந்த அரபு அல்லது முஸ்லிம் நாடுகளுக்கு அகதிகளாகச் செல்லவில்லை. தமிழர்களுக்கெதிராக போரிடும் நோக்கில் எந்தவொரு முஸ்லிம் நாட்டுக்கும் இராணுவப் பயிற்சி பெறவும் செல்லவில்லை. அவர்கள் புத்தளம், குருநாகல், அநுராதபுரம் மற்றும் கண்டி மாவட்டங்களிலுள்ள அகதி முகாம்களில் பெரும் இன்னல்களை அனுபவித்தவர்களாக வாழுகின்றனர். அகதி முகாம்களிலிருந்து 25-30 மைல்கள் தொலைவிலுள்ள தங்கள் வீடுகளுக்கு முஸ்லிம் அகதிகள் திரும்புவதை தமிழர்கள் தடுக்கின்றனர். அதே நேரத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகள் இந்தியாவிலிருந்தும் வேறு நாடுகளிலிருந்தும் சுதந்திரமாகத் திரும்பி வந்து தமிழர்களால் விரட்டப்பட்ட முஸ்லிம்களின் வீடுகள், கடைகள், பள்ளி வாசல்கள் மற்றும் நெற் காணிகளை அபகரித்துள்ளனர்.

எமது சமீபகால அனுபவங்களிலிருந்து, தமிழர்கள் வட-கிழக்கு மாகாணங்களிலிருந்து முஸ்லிம்களை துரத்திவிட்டு, அதை ஒரு தனிஇனத்துவ தமிழ் பிராந்தியமாக்கி எதிர்காலத்தில் ஒருநாள் தமிழ் ஈழத்தை தாபிக்கும் நன்கு திட்டமிட்ட சதியொன்றில் ஈடுபட்டுள்ளனர் என்பதை முஸ்லிம்கள் இன்று எதுவித சந்தேகமுமின்றி நன்கு அறிந்துள்ளனர்.

தமிழ் பேசும் பிரதேசங்களில் அமையவிருக்கும் அதிகாரப்பகிர்வு அலகு சூழ்நிலைக்கு பொருத்தமானதாகவும், தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் தனியான இனத்துவ உரிமைகளையும் வரலாற்று ரீதியான வாளிடங்களையும் பாதுகாக்கக் கூடியதாக அமைய வேண்டியது அவசியமாகும்.

வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை தளமாகவும், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் புவியியல் ரீதியாக நிலத்தொடர்பற்ற தமிழ் பிரதேசங்களாக இனங்காணப்படும் பிரதேசங்களை உள்ளடக்கியதாகவும் ஒரு பெரும்பான்மைத் தமிழ் பிராந்தியம் அமைக்கப்படுதல் வேண்டும்.

அம்பாரை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தேர்தல் தொகுதிகளைத் தளமாகவும் மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் மாவட்டங்களின் புவியில் ரீதியாக நிலத்தொடர்பற்ற முஸ்லிம் பிரதேசங்களாக இனங்காணப்படுபவற்றை உள்ளடக்கி ஒரு முஸ்லிம் பெரும்பான்மைப் பிராந்தியம் அலகை ஏற்படுத்தல் வேண்டும்.

முஸ்லிம் பெரும்பான்மை அலகின் விபரங்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

அரசாங்கம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் அதே நேரத்தில் வட-கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்களை அரசியல் மற்றும் சமூக அடிமைகளாக மாற்றிவிடக் கூடாது. எமது வரலாற்றின் மிகவும் இக்கட்டான ஒரு கால கட்டத்தில் பொ.ஜன.ஐ.மு அரசாங்கமும் முஸ்லிம்களுக்கு துரோகமிழைக்காதென நாம் நம்புகிறோம்.

## பின்னிணைப்பு

### *தமிழ் பேசும் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் முஸ்லிம் பெரும்பான்மை அதிகாரப் பகிர்வு அலகு*

1. பானமைப்பற்று, அக்கரைப்பற்று, சம்மாந்துறைபற்று, கரைவாகு-நிந்தவூர்பற்று ஆகிய முன்னாள் நான்கு டீ.ஆர்.ஓ பிரிவுகளும், மற்றும் வெவகம்பற்று தெற்கு உ.அ.அ. பிரிவு (கல்ஓயா ஆற்றுக்குத் தெற்குப்புறமாக) 920 சதுர மைல் பரப்பு அனைத்தும் உள்ளடங்கலாகத் தற்போதைய அம்பாரை மாவட்டத்தில் ஒரு தனியான, முஸ்லிம் பெரும்பான்மை நிர்வாக மாவட்டம் ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

2. மேலே 1ல் குறிப்பிடப்பட்டுள்ள புதிய நிர்வாக மாவட்டத்தில் ஒவ்வொரு ஜனசமூகத்தினதும் ஜனத்தொகை விகிதா சாரத்துக்கேற்ப விவசாயக் காணிகள் மற்றும் இயற்கை மூலவளங்களை உள்ளடக்கி இனத்துவ அடிப்படையிலான பிரதேச சபைகள் - உ.அ.அ. பிரிவுள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

3. காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை என்பவற்றில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 24% மாகிய முஸ்லிம் ஜனத்தொகை விகிதாசாரத்துக்கு ஏற்ப விவசாய நிலங்கள் மற்றும் இயற்கை மூலவளங்களை உள்ளடக்கி முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேச சபைகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். பரப்பு 346 சதுர மைல்கள்.

4. திருக்கோணமலை மாவட்டத்தில் மூதூர், கிண்ணியா, தம்பலகாமம், தோப்பூர் மற்றும் குச்சவெளியில், 29% மாகிய முஸ்லிம் ஜனத் தொகையின் விகிதாசாரத்துக்கு ஏற்ப விவசாய நிலங்கள் மற்றும் இயற்கை மூலவளங்களை உள்ளடக்கி முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேச சபைகள் - உ.அ.அ. பிரிவுகள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும். பரப்பு 414 சதுர மைல்கள்.

5. மன்னார் மாவட்டத்தில் முசலி மற்றும் எருக்கலம்பிட்டியில், 27% ஆகிய முஸ்லிம் ஜனத்தொகையின் விகிதாசாரத்துக்கேற்ப விவசாய நிலங்கள் மற்றும் இயற்கை மூலவளங்களை உள்ளடக்கி முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசசபைகள் - உ.அ.அ. பிரிவுகள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும். பரப்பு 278 சதுர மைல்கள்.

6. கல்முனை, சம்மாந்துறை, காத்தான்குடி மற்றும் கிண்ணியாவில் பிரதேசசபை உ.அ.அ. பிரிவுகள் தவிர்ந்த பகுதிகளில், முஸ்லிம் பெரும்பான்மையைக் குறைக்காத விதத்தில் நகரசபைகள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

7. மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் மாவட்டங்களில் முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபைகள் - உ.அ.அ. பிரிவுகளை இணைக்கும் விதத்தில், தனியான முஸ்லிம் பெரும்பான்மை நிர்வாக மாவட்டங்கள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

8. வட-கிழக்குப் பிரதேசத்தில் ஏற்படுத்தப்படும் சகல முஸ்லிம் பெரும்பான்மை நிர்வாக மாவட்டங்களும் தனியான தேர்தல் மாவட்டங்களாகக் கணிக்கப்படுதல் வேண்டும்.

9. 1,958 சதுர மைல்கள் அல்லது 5,071 சதுர கிலோ மீற்றர்கள் நிலப்பரப்பும் 480,000 ஜனத்தொகையுமுள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள சகல முஸ்லிம் பெரும்பான்மை நிர்வாக-தேர்தல் மாவட்டங்களுக்கும் வட-கிழக்கு பிராந்தியத்தில் முஸ்லிம் பெரும்பான்மை அதிகாரப் பகிர்வு அலகாக அமைதல் வேண்டும்.

வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த தாயகத்தில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் ஐக்கியத்துடனும் சமாதானத்துடனும் வாழவேண்டும் என்பதையும், முஸ்லிம்கள் இப்பிரதேசங்களில் சிறுபான்மையினராக வாழ்கின்ற காரணத்தினால் அவர்கள் அச்சம், பயம், சந்தேகமற்று வாழ வேண்டியதும் முக்கியமாகையால் அவர்களது பாதுகாப்பையும் சமமான உரிமைகளையும், சுதந்திரத்தையும் உத்தரவாதப்படுத்த வேண்டியது அவசியம் என்று உணரப்படுவது மாத்திரமன்றி கொள்கையும் என்பதால், முஸ்லிம்கள் அச்சம் சந்தேகம் பயமற்று வாழ்வதற்கான சூழ் நிலைகள் உடனடியாக ஏற்படுத்தப்படுவதற்குத் தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவர் என்பதையும், முஸ்லிம்கள் பாதுகாப்புடன் வாழ்வதற்கு எதிர்பார்க்கப்படும். முழு உத்தரவாதமும் சட்டரீதியாக வழங்கப்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம்.

சதாசிவம் கிருஷ்ணகுமார்
மத்திய குழு உறுப்பினர்
தமிழீழ விடுதலைப் புலிகள்
21.04.1998

எம்.ஐ.எம்.முஹியத்தீன்
செயலாளர் நாயகம்
முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி
21.04.1998